விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 16 வியாழக்கிழமை (31.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

## வடக்கில் நேற்றும் 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

### யாழில் 12, புதுக்குடியிருப்பில் 1

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று 13 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது.

யாழ.போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்.மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 676 பேருக்கு கோவிட்-19 பரிசோதனை செய்யப் 19

யாழ்.மாநகர சபையில்

## மணிவண்ணனை ஆதரித்த 10 பேரையும் நீக்குவோம்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)

எமது கட்சியில் இருந்து நீக்கப்பட்ட வி.மணிவண்ணனை ஆதரித்து, கட்சியின் கொள்கைக்கு துரோகம் செய்த 19

## மணி தரப்புடன் இரகசிய உடன்பாடு இல்லை – டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபைகளில் மணிவண்ணனுடன் எந்த இரகசிய உடன்பாடும் செய்து கொள்ளவில்லை என்று ஈழமக்கள் 19

## யாழ்.மாநகர சபையின் புதிய முதல்வராக மணிவண்ணன் தெரிவு



### ஈ.பி.டி.பியும் ஆதரவாக வாக்களிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 23ஆவது புதிய முதல்வராக சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆனல்டைவிட ஒரு மேலதிக வாக்கைப் பெற்று மணிவண்ணன் முதல்வராகத் தெரிவாகியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

கொரோனா பலி

## இரட்டை சதத்தை நெருங்கியது

### நேற்றும் 4 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோய்த் தொற்றால் மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 19



## நல்லூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக மயூரன் தெரிவு

### நல்லூரையும் பறிகொடுத்த கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பத்மநாதன் மயூரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான விசேட அமரவு வடக்கு மாகாண 19

## முல்லையில் இருவேறு பகுதிகளில் இரண்டு சடலங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவின் இருவேறு பகுதிகளில் நேற்று இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

முள்ளியவளை - நாவல்காட்டுப் பகுதியில் ஆணின் சடலமும் கள்ளப்பாடு தெற்கு பகுதியில், பெண் ஒருவரின் சடலமும் மீட்கப் பட்டுள்ளது.

நாவல்காட்டு கிராமத்தில், பாழடைந்த கிணறு ஒன்றல் இருந்து உருக 19

## 55 மோட்டார் குண்டுகள் பளைப் பகுதியில் மீட்பு



(பளை)

பளைப் பகுதியில் நிலத்தில் புதைந்த நிலையில் காணப்பட்ட 55 மோட்டார் குண்டுகள் மீட்கப் பட்டுள்ளன என பளைப் பொலிஸார் தெரிவித் 19

## 4 மாத கர்ப்பிணிப் பெண் பருத்தித்துறையில் திடீர் மரணம்

### பி.சி.ஆர் பரிசோதனைக்காக மாதிரிகள் அனுப்பி வைப்பு

(பருத்தித்துறை)

யாழ்.பருத்தித்துறை - சாரையடி பகுதியில் கர்ப்பவதி பெண் ஒருவர் திடீரென உயிரிழந்த நிலையில் அவரிடம் பி.சி.ஆர் பரிசோத 19

## உக்ரேனிலிருந்து இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகள் மூவருக்கு கொரோனா

11ஆம் பக்கம் பார்க்க

எழுமாற்றுப் பரிசோதனை

## மட்டக்களப்பில் 63 பேருக்கு கொரோனா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர் பஸார் வீதி மற்றும் காத்தான்குடி நகர் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் அங்கு 19

## மாவையின் தன்னிச்சையான செயற்பாட்டால் யாழ்.மாநகர சபையை இழந்தோம்

### சுமந்திரன் காட்டமான கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முதல்வர் தெரிவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தோல்விக்கு மாவை சேனாதிராசாவே பொறுப்பேற்க வேண்டுமென எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கட்சி தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் உங்களுடைய தன்னிச் 19

# தற்போது கொரோனா சூழ்நிலையில் எந்த தேர்தலும் நடத்த தீர்மானிக்கவில்லை

## அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பில் திங்கட்கிழமை இடம்பெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், இறுதியில் இப்போது தேர்தலை நடத்துவதில்லை என்றே தீர்மானிக்கப்பட்டது என்று சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். செய்தியாளர் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

நாட்டைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான சிவனொளிபாத யாத்திரைக்காலம் ஆரம்பமாகியிருக்கிறது. எனினும் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக இம்முறை சிவனொளிபாத மலைக்குச் செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் என்றே நம்புகின்றோம். கடந்த வருடம் சுமார் 2 இலட்சத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் கலந்துகொண்டார்கள். இம்முறை குறைந்தளவானோரே கலந்துகொண்டாலும் கூட, அவர்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் அதே வேளை சுற்றாடலை மாசுபடுத்துவதைத் தவிர்த்துக்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். அதுமாத்திரமன்றி சுற்றாடலை மாசுபடுத்தும் விதமாக செயற்படுவோருக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அண்மையில் உக்ரேனிலிருந்து விவசாயக்கழிவுகள் அடங்கிய 28 கொள்கலன்கள் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இவை நாட்டிற்குள் திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் விசாரணை அறிக்கை கிடைக்கப்பெறும் என்பதுடன் இதில் உள்நாட்டு வர்த்தகர்கள் தொடர்பு பட்டிருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்ததாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கு மின்கட்டணம் அறவிடப்படமாட்டாது என்று அப்போதைய மின்வலு அமைச்சர் கூறியதாக எதிர்க்கட்சித் தலைவர் அண்மையில் கருத்தொன்றை வெளியிட்டார். நாம் அவ்வாறு ஒருபோதும் கூறவில்லை. மாறாக மின்சாரக்கட்டண அறவீட்டில் நிவாரணம் வழங்கப்படும் என்றே நாம் கூறினோம். அதற்கேற்ப நிவாரணத்தையும் வழங்கினோம். ஆகவே "ஜோக்கர்" போன்று செயற்படாமல், உண்மைகளைக்கூறி அரசியல் செய்யுமாறு நான் சஜித் பிரேமதாஸவிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இதன்போது கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களைத் தகனம் செய்வது குறித்து எழுந்திருக்கும் சர்ச்சை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர் பின்வருமாறு கூறினார,

இவ்விடயத்தில் அரசியல் ரீதியில் தீர்மானம் மேற்கொள்ளப்படாது. இவ்விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட தொழில்நுட்பக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சடலங்களைத் தகனம் செய்வது தொடர்பான சர்ச்சைக்கு விஞ்ஞானபூர்வ அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றே கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதும் வலியுறுத்தப்பட்டது.

ஆகவே இப்பிரச்சினையை மதரீதியாகவோ அல்லது இனவாத அடிப்படையிலோ நோக்காமல், தொழில்நுட்பக் குழு சுயாதீனமாக வழங்கும் பரிந்துரையின் அடிப்படையில் செயற்படுவதே உகந்ததாகும். சடலங்களைத் தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்ற தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொள்ளாது. மாறாக தொழில்நுட்பக் குழுவின் சுயாதீன தீர்மானத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என பதிலளித்தார். (ம-03)


**வேலை வாய்ப்பு**

**பொறியியல் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்**

உங்கள் விண்ணப்பங்களை சுய விபரக்கோவையுடன் முன் அனுபவம் மற்றும் தகைமை தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**முகாமையாளர்**
**இல. 866, பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (C-1058)

**காணி தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இடங்களுக்குள் காணிகள் தேவை.

10 பரப்பு தொடக்கம் 30 பரப்பு வரையான காணி தேவை.

(தரகர் தேவையில்லை)

தொடர்பு (5122)
**076 221 2037**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலை வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.**

[ கோண்டாவில் சந்தியில் இருந்து 500 M தூரம் ]

(தரகர் தேவையில்லை)

தொடர்பு (5122)
**077 288 0152**

**24 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்**



தாயின் மடியில் **31.12.1996**

நோயின் பிடியில் **31.08.2016**

அமரர்

**வெற்றிவேலு பிரசாந்தி**

( யா / மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
க.பொ.த உயர்தரம், கணிதப் பிரிவு – 2015 )

எங்கள் செல்லமகளே பிரசாந்திக்குட்டி
இன்று மண்ணில் மலர்ந்த நன்நாள் அல்லவா!
இருபத்து நான்கு வயதினில் இளஞ்சிட்டாய் நீயும் குதூகலிக்க
இறைவன் உம்மை விடவில்லை - செல்லமே!

எம்முடன் அகமகிழ்ந்த அந்நாளில்
இன்று இருள் சூழ்ந்து விட்டதம்மா!
பிறந்ததின வாழ்த்துக் கூற தேடுகின்றோம் உமை எங்கும்
இளையவளே உனைக்காணாது
பெற்றமனம் கதறித் துடிக்குது - செல்லமே !
உடன் பிறப்புகள் உன்நிழலடிகளை
தேடி அலைகின்றோம் செல்லமே!

கடைக்குட்டியே உன்னை
ஆசையோடு அரவணைத்தோம்
கடைசிவரை எம்மோடு இருப்பாய் என்று
பாரினிலே நாமிங்கு காத்திருக்க
கானல் நீராய் கரைந்ததம்மா உம்வாழ்வு!

பாதிவழியில் உனதுயிரை பறிக்க வந்ததுவோ - கொடியநோய்
பார்த்திருக்க பதினைந்து நாளில் - உனை
பறித்தான் இயமன் ஏனோ?
எம்மனம் விடை கொடுக்க மறுத்த போதும் பிரிந்து செல்ல
காலன் இடம் கொடுத்து விட்டான்!!
விதியின் சதி இது தானா என்று
விம்முகின்றோம் பாவிகள் நாம்!!!

உன்நினைவுகள் மாறாதவடுவாய் - எம்
உள்ளத்தை உருக்குலைக்குதம்மா!
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
ஆறாதம்மா உந்தன் துயரம்

மறுபிறப்பு உண்டென்றால் மறுபடியும்
மகளாக வந்து பிறந்திடம்மா - எம்மனையில்
உன்வரவை எண்ணி ஏக்கமுடன்
காத்திருப்போம் என்றும்...!

விண்ணுலகில் வாழும் எங்கள்
பிரசாந்திக் குட்டிக்கு கண்ணீரில் நனைந்த
பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

" பிரசாந்தி வாசா "
எல்லை ஒழுங்கை, தும்பளை,
பருத்தித்துறை. (C-1044)

**077 986 2521**

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# யாழ்.மாநகர சபையை எங்கள் சக்திக்கு அப்பால் சென்று அபிவிருத்தியடைந்த நகரமாக மாற்ற முழுமையாக அர்ப்பணிப்போம்

## யாழ்.மாநகர புதிய முதல்வர் மணிவண்ணன் வாக்குறுதி

(குப்பிழான்)

**யாழ்.மாநகர சபைக்கிருந்த வருமானம் தற்போது வீழ்ச்சியடைந்திருப்பதால் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சவால்கள் நிறையவிருக்கின்றன. எங்களால் முடிந்தளவு யாழ். மாநகரசபையை எங்கள் சக்திக்கு அப்பால் சென்று அழகாகவும், அபிவிருத்தி அடைந்த மாநகரமாகவும் மாற்றுவதற்கு முழுமையாக அர்ப்பணிப்போம் என யாழ். மாநகர சபையின் புதிய முதல்வராகப் பதவியேற்றுள்ள சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.**



யாழ். மாநகரசபையின் புதிய முதல்வர் தெரிவின் பின்னர் நேற்று புதன்கிழமை முற்பகல் மாநகரசபையின் முதல்வர் அலுவலகத்தில் இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்ற யாழ். மாநகர சபையின் முதல்வர் தெரிவுக்காகப் போட்டியிடுவதென நாங்கள் தீர்மானித்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதல் வர் வேட்பாளராக மீண்டும் முன்னாள் முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்டைப் பிரேரித்திருப்பதன் காரணமாக சிலவேளைகளில் யாழ். மாநகர சபையைக் கலைக்கக்கூடிய அபாயம் இருப்பதாக நாங்கள் உணர்ந்தோம். எனவே, அதனைத் தவிர்த்துக் கொள்வதற்காக முதல்வர் தெரிவுக்காகப் போட்டியிடுவதென எங்கள் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவு செய்தோம். இதற்கமைய எல்லா யாழ்.மாநகரசபை சபை உறுப்பினர்களிடமும் பகிரங்கமாக ஒரு வேண்டுகோளை விடுப்பது என முடிவுசெய்து நேற்று முன்தினம் அந்த அறிவிப்பை வெளியிட்டோம். அந்தவகையில் அந்தப் பகிரங்க அழைப்பை ஏற்று எனக்கு 21 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்து புதிய முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். அந்தவகையில் வாக்களித்த உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதுவரை காலமும் பல கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் சபையை வழிநடத்திய முன்னாள் முதல்வருக்கும் நான் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட போது யாழ். நகரத்தை மாற்றியமைப்பதற்கான திட்ட வரைபு ஒன்றை நாங்கள் முன்மொழிந்திருந்தோம். அந்தத் திட்டவரைபில் இரண்டு வருடங்களுக்குள் நாங்கள் செய்து முடிக்கப் போகும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் குறிப்பிட்டிருந்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக 2020 ஆம் ஆண்டு முடிவில் தான் யாழ். மாநகரசபைக்குச் சேவையாற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தற்போது கொரோனாத்தொற்றினால் நாடு மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நாடு சுமுகமாக இயங்க முடியாததொரு சூழ்நிலை காணப்படுகிறது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் எங்களால் முன் மொழியப்பட்ட திட்டத்தில் எவ்வளவு தூரம் நகர்ந்து செல்ல முடியும் என்பதை என்னால் தற்போது உறுதியாகக் கூற முடியாதுள்ளது.

அந்தவகையில் என்னைத் தெரிவு செய்து யாழ்.மாநகர சபைக்கு அனுப்பிய தமிழ் மக்களுக்கும், யாழ். மாநகர முதல்வர் ஆக்கிய யாழ். மாநகரசபை உறுப்பினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (ஐ-5-4-18)

# அரச அனுமதியுடனோ அனுமதியில்லாமலோ மன்னாரில் மண் அகழ்வில் ஈடுபட அனுமதியில்லை

## சுற்றுச்சூழல் அமைப்பின் கலந்துரையாடலில் தீர்மானம்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட கனிய ஆய்வு மற்றும் மன்னார் மாவட்டத்தில் குறித்த நிறுவனம் மேற்கொள்ளவுள்ள கனிய அகழ்வு தொடர்பாகவும் மண் மற்றும் கனிய வள சுரண்டல்களை சட்ட ரீதியாக அணுகுவது தொடர்பான கலந்துரையாடல் மன்னார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் பிரஜைகள் குழுவின் அனுசரணையில் சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தினால் நேற்று மன்னார் வாழ்வோதயம் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்திலே மன்னார் மாவட்ட எல்லை பகுதிக்குள் அரச அனுமதியுடனோ அரச அனுமதி இன்றியோ சட்ட ரீதியாகவோ சட்ட முரணாகவோ மண் அகழ்வு மேற்கொள்ள அனுமதிக்கப் போவதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

நாட்டின் வளங்கள் பயன்பாடு தொடர்பாக நாடளாவிய ரீதியில் காணப்படும் சட்டங்கள் தொடர்பாகவும் அவற்றை பாதுகாப்பதற்காக நீதி மன்றங்களை பயன்படுத்துவதற்கு ஏதுவான காரணங்கள் தொடர்பாகவும் சுற்றாடல் நீதிக்கான அமைப்பின் விரைவுரையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னரே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதே நேரத்தில் மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடங்களில் அவுஸ்திரேலிய நிறுவனத்தினால் இடம் பெற்றுள்ள கனியவள ஆய்வு செயற்பாடு தொடர்பாகவும் அவற்றை கையாள்வதற்கான அணுகுமுறைகள் தொடர்பாக கனிய அகழ்வை தடுப்பதற்கான பல்வேறு தெளிவுபடுத்தல்களும் வழங்கப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் சூழலியலாளர்கள், பிரஜைகள் குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்


குறித்த கனியவள ஆய்வு மற்றும் அகழ்வுக்கு எதிராக நேற்று முன்தினம் எதிர்ப்பு போராட்டம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு பணி இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வருட இறுதிப்பணிகளை முன்னிட்டு இன்று 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியுடன் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பொது மக்களுக்கான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ-5)

# மட்டக்களப்பில் 26 பேருக்கு தொற்று



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தற்போது நிலவி வரும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, அனைத்து வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோருக்கான அன்டிஜன் பரிசோதனைகள் காந்தி பூங்காவில் இடம்பெற்றது.

இந்நிலையில், மட்டக்களப்பு நகரப்பகுதி வர்த்தகர்கள் 553 பேரிடம் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் 26 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 22 பேர் காத்தான்குடியைச் சேர்ந்தவர்களெனவும் தெரியவந்துள்ளது.

மேலும், தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் பணிபுரியும் 17 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன், அங்கிருந்தவர்கள் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணத்தை முதன்முறையாக கைப்பற்றியது ஓல்ட்கோல்ஸ்



ஓல்ட் கோல்ஸ்



யாழ்.ஜொனியன்ஸ்



கே.சி.சி.சி

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 11 ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வின் முடிவுகள் தமது கழக 11 ஆவது அகவையான நேற்றையதினம் வெளியிட்டுள்ளனர்.

ஓல்ட்கோல்ஸ் அணி முதன்முறையாக 16 போட்டிகளில் பங்கு பற்றி 10 போட்டிகளில் வெற்றி பெற்று 5 போட்டிகளில் தோல்வியும், ஒரு போட்டியில் முடிவில்லாமலும் 91.85 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும், யாழ். ஜொனியன்ஸ் அணி 8 போட்டிகளில் பங்கு பற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று ஒரு போட்டியில் தோல்வியுமடைந்து 58 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் கே.சி.சி.சி. அணி 17 போட்டிகளில் பங்கு பற்றி 5 போட்டிகளில் வெற்றியும் 4 போட்டிகளில் தோல்வியும் ஒரு போட்டியில் சமநிலையும் அடைந்து 49.02 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளனர்.

ஏனைய கழகங்களான சென்றலைட்ஸ் 41.35, யாழ்.சென்றல் 39.88, விக்டோறியன்ஸ் 36.41, ஜொலிஸ்ரார் 34.31, AB 33.04, யூனியன்ஸ் 26.81, கிறாஸ்கொப்பர்ஸ் 20.58, யாழ். பல்கலைக்கழகம் 20.22, மானிப்பாய் பரீஸ் 19.95, ரி.சி.சி.14.90, டிறிபேக்ஸ்ரார் 13.07, ஹாட்லியையிற்ஸ் 10.52, டிறைற் றோன் 9.18, விக்டோறியன்ஸ் 8.87, ஸ்ரான்லி 8.12, ஸ்கந்தாஸ்ரார்ஸ் 5.19, றெஜின்போ 4.49, சிறி காமாட்சி 4.39, அரியாலை சென்றல் 4.18, T.Y.M.H.A 3.07, பற்றீசியன்ஸ் 2.23 நியூஸ்ரார் 1.38 ஆகிய புள்ளிகளைப் பெற்றுள்ளன. (4)

## தனிமைப்படுத்தலை நிறைவு செய்து அணியுடன் இணைகிறார் ரோகித்




சிட்னியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ரோகித் சர்மா, இன்று இந்திய கிரிக்கெட் அணியுடன் இணைய உள்ளார்.

இந்திய அணியின் அதிரடி தொடக்க பட்ஸ்மனான ரோகித் சர்மா காயம் காரணமாக முதல் இரண்டு போட்டிகளில் விளையாடவில்லை.

3ஆவது போட்டியில் விளையாட உடற்தகுதி பெற்றதால் கடந்த 16ஆம் திகதி அவுஸ்திரேலியா சென்றடைந்தார். அன்றைய தினத்தில் இருந்து 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்தார்.

14 நாட்கள் முடிவடைந்ததையொட்டி இன்று மெல்பேர்னில் இருக்கும் இந்திய அணியுடன் ரோகித் சர்மா இணைகிறார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது. இதனால் மெல்பேர்னிலேயே 3ஆவது போட்டி நடைபெற வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் அவர் மெல்பேர்ன் வந்து அணியுடன் இணைகிறார்.

3 ஆவது டெஸ்ட் போட்டி ஜனவரி 7ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ளது. (4)

## ரகானேவின் ஆட்டம் ஓர் திருப்புமுனை

### ரவிசாஸ்திரி பெருமிதம்



அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மெல்பேர்னில் (பாக்சிங் டே டெஸ்ட்) நடைபெற்றது. 4 ஆவது நாள் ஆட்டத்தில் 70 ரன்கள் இலக்கை 2 விக்கெட்டை மட்டுமே இழந்து இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் இந்திய அணி தொடரை 1-1 என சமநிலைப்படுத்தியுள்ளது.

அடிலெய்டு டெஸ்டில் 36 ரன்னில் சுருண்டபின், அபாரமாக மீண்டு வெற்றி பெற்றதை அனைவரும் பாராட்டி வருகின்றனர். விராட் கோலி, ரோகித் சர்மா, இஷாந்த் சர்மா, முகமது ஷமி ஆகிய நான்கு பேர் இல்லாமல் இந்த வெற்றி கிடைத்துள்ளது.

இந்நிலையில், முதல் இன்னிங்சில் ரகானே போராடி சதமடித்தது இந்த டெஸ்டின் ஓர் திருப்பு முனையாக அமைந்தது என இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ரவிசாஸ்திரி கூறுகையில், முதல் இன்னிங்சில் ரகானே இறங்கிய போது 2 விக்கெட்டை இழந்திருந்தோம்.

அதன்பிறகு 6 மணிநேரம் பட்டிங்கில் போராடினார். அதுவும் மேகமூட்டமான சீதோஷ்ண நிலையில் பட்டிங்குக்கு கடினமான அந்த நாளில் 6 மணி நேரம் கவனம் செலுத்துவது நம்பமுடியாத ஒன்று.

அவரது இன்னிங்ஸ் தான் இந்த டெஸ்டில் திருப்பு முனையாகும். விராட் கோலி, ரகானே இருவரும் ஆட்டத்தை நன்றாக கணிக்கக்கூடியவர்கள். களத்தில், கோலி அதிக உணர்ச்சியை வெளிப்படுத்துவார். ரகானே பொறுமையாக செயற்படுவார்.

முதல் டெஸ்டில் மோசமாக தோற்று அதன் பிறகு வலுவாக மீண்டெழுந்து வெற்றி பெற்ற வகையில், இந்திய கிரிக்கெட்டில் மட்டும் அல்ல, உலக கிரிக்கெட் அரங்கில் மிகச்சிறந்த சாதனைகளில் இதுவும் ஒன்றாகும் என தெரிவித்துள்ளார். (4)

# வீடு புகுந்து சரமாரியாகத் தாக்குதல்

# ஐவர் படுகாயம்;ஒருவர் கைது

**(மட்டக்களப்பு)**

**மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி இளைஞர் விவசாயத்திட்டம் எனும் கிராமத்திலுள்ள வீடு ஒன்றினுள் புகுந்த கும்பல் அக்குடும்பத்தின் வீட்டுக் கதவை உடைத்து, அக்குடும்பத்தையே சராமாரியாக கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளனர்.**

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இளைஞர் விவசாயத்திட்டக் கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 8 மணியளவில் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு குடும்பத்தினர் நித்திரைக்குச் சென்றுள்ள நிலையில், குறித்த கும்பல் கூரிய ஆயுதங்களுடன் மோட்டார் சைக்கிளில் வந்து குடும்பத்தின் வீட்டுக்கதவை உடைத்து, அக்குடும்பத்திலிருந்த தந்தை தாய் மற்றும் இரண்டு பெண் பிள்ளைகள் ஆகிய நால்வரையும் மற்றும் அவர்களது அயல் வீட்டுக்கார ஆண் ஒருவரையும் தாக்கிவிட்டு மிகவும் சூட்சுமமான முறையில் தப்பியோடியுள்ளனர்.

இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும், அவர்களது அயல் வீட்டார் ஒருவருமாக 5 பேர் பலத்த வெட்டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த அனைவரையும் கிராமத்தவர்கள் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# சில பகுதிகள் விடுவிப்பு



(கொழும்பு)

கொஸ்கம பொலிஸ் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் அதிகரித்தமையைத் தொடர்ந்து, நாட்டின் பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த பகுதிகளில் சில பகுதிகள் கட்டம் கட்டமாக தனிமைப்படுத்தலில் இருந்து விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஒருவர் கைது

(கொழும்பு)

அஹுன்கல்ல பகுதியில் உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அஹுன்கல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.15 மணியளவில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

# மத்திய மாகாணத்தில் அதிகரிக்கும் கொரோனா

(கண்டி)

மத்திய மாகாணத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 1740 ஆக அதிகரித்துள்ளதாக, மத்திய மாகாண சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திலேயே அதிகளவு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதற்கமைய, கண்டி மாவட்டத்தில் இதுவரை 1076 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் நுவரெலியா மாவட்டத்தில் 538 தொற்றாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 126 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஜ-4)

# இன்றைய தினம் தீர்மானமிக்கது

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(கொழும்பு)

பண்டிகை நிகழ்வுகளை இன்றையதினம் வியாழக் கிழமை குடும்பத்தாருடன் மாத்திரம் மட்டுப்படுத்திக்கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றையதினம் தீர்மானம் மிக்கதாகும் என கூறிய அவர், குடும்பத்தினருடன் மாத்திரம் கொண்டாட்டங்களை மட்டுப் படுத்திக்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

பொதுப் போக்குவரத்து மற்றும் கொழும்பிலிருந்து வெளியேறும் பேருந்துகளில் நாளை மீண்டும் அதிகாரிகள் சிவில் உடையில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ-4)

## பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு

# ஒரு நிறுவனத்திலிருந்து இரு ஊடகவியலாளர்கள் வரலாம்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாகும். அத்துடன், ஜனவரி 8 ஆம் திகதி வரைக்கும் சபை அமர்வுகள் முன்னெடுக்கப்படும்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தின் காரணமாக, பாராளுமன்றத்தின் கலரிகள் யாவும் மூடப்பட்டன. விசேடமாக ஊடகவியலாளர் கலரியும் மூடப்பட்டே இருந்தது.

இந்நிலையில், புத்தாண்டு அமர்வுகள் தொடர்பிலான செய்திகளை சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு நிறுவனத்தில் இருந்து இரண்டு ஊடகவியலாளர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# தம்மிக்கவின் மருந்துக்கு மற்றுமொரு அனுமதி

(கேகாலை)

கேகாலை தம்மிக்க பண்டாரவின் கொரோனா தடுப்பு தேசிய ஔடதத்திற்கு ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நெறிமுறை குழு அனுமதி வழங்கியுள்ளது. (ஜ-4)


2ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நடராஜா நகுலேந்திரராஜா



மறைந்துவிட்ட உங்கள் உறவின்
நீங்காத நினைவுகள்
உதிர்ந்து விட்ட உங்கள்
நினைவின்
உலராத வாசனை
இழந்த அன்பானவரின்
நீங்காத பொழுதுகள்
இதயம் துடிக்கும் வரை
மாறாது நினைப்பு
இயற்கையின் அழைப்பு
மீற முடியாத பயணம்
சென்ற தூரமோ
மீள முடியாத பாதை
கண்முன் உங்கள் விம்பம்
காலத்தை கடந்தும்
கலைய வில்லை
எம்மைவிட்டு பிரிந்த
நீங்கள் எம் நினைவைவிட்டு
பிரிய மறுப்பதேன்

தோற்றம்: 1953.05.01
மறைவு: 2018.12.31

V.H வீதி, இருபாலை,
கோப்பாய்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தார்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டுத்தரக்கோரி போராட்டம்

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டுத் தாருங்கள் எனக்கோரி உறவுகளால் கவனயீர்ப்புப் போராட்டம் பல்வேறு பகுதிகளில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது. அந்தவகையில் யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் ஆலய பின்பக்க வீதியில் அமைந்துள்ள நல்லை ஆதீனம் முன்பாகவும் கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க அலுவலகம் முன்பாகவும் வவுனியாவில் பழைய பேருந்து நிலையம் முன்பாகவும் மன்னாரில் நகர பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாகவும் போராட்டங்கள் இடம்பெற்றன.

(ஜ-5-18-33-100-101-250-285-299)

## யாழ்ப்பாணம்



## கிளிநொச்சி



## வவுனியா




## மன்னார்



## குளங்களைப் புனரமைப்பதால் வெள்ள அனர்த்தத்தைக் குறைக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் உள்ள குளங்களை ஆழப்படுத்தி நீரின் கொள்ளளவை அதிகரிக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம. நடனதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சியில் பல குளங்கள் வருடக்கணக்கில் உரிய புனரமைப்பு இன்றிக் காணப்படுகின்றன. இதனால் மாரி காலங்களில் குளங்கள் நிரம்பி வெள்ள அபாயம் ஏற்படுகிறது.

குளங்களை ஆழப்படுத்துவதன் மூலம் அதிகளவான மழை நீரைத் தேக்கி ஓரளவிற்கு வெள்ள அபாயத்தைக் குறைக்க முடியும். அத்துடன் சட்டவிரோதக் கட்டடங்களால் பல வாய்க்கால்கள் அடையாளம் தெரியாமல் போய்விட்டன.

இதனால் வெள்ள நீர் கடலையோ அல்லது குளங்களையோ சென்றடைய முடியாமல் குடிமனைக்குள் தேங்கி பல்வேறு இடர்களை ஏற்படுத்துகிறது.

அவ்வாறு வாய்க்கால்களை மறித்து அமைக்கப்பட்டிருக்கும் சட்டவிரோதக் கட்டடங்களை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதுடன், நீர் ஓட்டத்திற்கான மாற்று வழிகளையும் கண்டறிய வேண்டும்.

குறிப்பாக சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட கண்டுவில் குளம், கற்குழிகுளம் மற்றும் வனுவில் குளம் ஆகியன உரிய புனரமைப்பு இன்றி காணப்படுகின்றன. இதனால் மாரி காலத்தில் சாவகச்சேரியின் பல பாகங்களிலும் வெள்ள அனர்த்தம் ஏற்படுகிறது.

எனவே வெள்ள அனர்த்தத்தை கட்டுப்படுத்தவும், மழை நீரை சேகரிக்கவும் குளங்களை ஆழப்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

## மேல் மாகாணம் சென்று வருவோர் தொடர்பில் கவனம் தேவை

### சுகாதார வைத்திய அதிகாரி

(நெளுக்குளம்)

தற்போதைய சூழ்நிலையில் அரச திணைக்களங்களை சேர்ந்த பல்வேறு ஊழியர்கள் மேல்மாகாணத்திற்கு சென்று வருகின்றனர். அவர்கள் தொடர்பில் கவனமெடுக்குமாறு வவுனியா பிரதி சுகாதார வைத்திய அதிகாரி துஷ்யந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொவிட்-19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் அமைந்துள்ள பல்வேறு அரச திணைக்களங்களை சேர்ந்த அலுவலர்கள் பலர் மேல்மாகாணத்திற்கு சென்று வருகின்றனர். தொடர்ந்து இச் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. அதனை நாம் ஒவ்வொருவருவாக கவனிப்பது மிகவும் கடினம். எனவே திணைக்களங்களின் தலைவர்கள் இந்தவிடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை வெளி மாகாணங்களில் இருந்து கிராமங்களிற்கு வருபவர்களை தனிமைப்படுத்த வேண்டிய தேவை இருப்பதுடன் அவர்களை இனம் காண வேண்டிய தேவையும் இருக்கிறது. இது தொடர்பாக பொதுமக்களே சுகாதார பிரிவினருக்கு அதிகமான தகவல்களை வழங்குகின்றனர்எனவும் அவர் தெரிவித்தார். (5-4-299)

## சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வே மாகாணசபை- மஸ்தான்

(குருமன்காடு)

சிறுபான்மை சமூகத்திற்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு ஒரு தற்காலிக தீர்வாகவே மாகாணசபை வந்தது. எனவே அந்த உரிமையை நாம் இழக்க முடியாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான்தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகள் தொடர்பில் ஒவ்வொருவரும் தெரிவிக்கும் கருத்துக்கள் அவர்களது தனிப்பட்ட கருத்துக்கள். மாகாண சபைகள் இயங்க வேண்டும்.

சிறுபான்மை சமூகத்திற்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு ஒரு தற்காலிக தீர்வாக மாகாண சபைகள் அப்போது வந்தன. இருக்கும் அந்த உரிமைகளை நாம் இழக்க முடியாது.

கடந்த அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட தேர்தல் முறை மாற்றம் தான் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

விரைவாக இந்த அரசாங்கத்தால் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும். கட்சித் தலைவர்களின் விருப்பத்துடன் மாகாண சபை செயற்படுத்தப்படும். அது இல்லாமல் போகாது. எமது அரசாங்கம் வந்து மூன்று மாதங்கள் தான்.

ஆனால் அதற்கு முன் ஒன்றரை வருடங்களாகவே மாகாண சபை தேர்தல் நடைபெறவில்லை.

ஆகவே காலதாமதம் ஏற்படுமே தவிர, மாகாண சபை தேர்தல் இல்லாமல் போகாது எனத் தெரிவித்தார்.(5-4-250)



யாழ்.பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜாவின் அனுமதியுடன் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஆதரவுடன் கலைப்பீட 40 அணி மாணவர்களினால் திருவெண்பா ஓதுதல் நிகழ்வு கடந்த ஒன்பது தினங்களாக இடம்பெற்றது. இறுதி நாளான நேற்று மாணிக்கவாசகரது திருவுருவப்படம் தாங்கி திருவெண்பா ஓதுதல் நிகழ்வு இடம்பெற்றது.




வவுனியாவில் சபரிவாசன் தீர்த்த யாத்திரை குழுவின் மண்டல பூஜை வவுனியா உக்குளாங்குளம் ரகுபாக்கத்தில் அண்மையில் இடம்பெற்றது.

(படம்:-சதீஸ்)



பிரதமரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத் தலுக்கமைய நாடளாவிய ரீதியில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொரோனாத் தாக்கத்தால் அல்லலுறும் உலக மக்களின் நலன் வேண்டி முன்னெடுக்கப்படும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் நல்லூர் வடக்கு சட்டநாதர் கொன்றையடி வைரவப் பெருமான் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. .

(படம்:-ரவிசாந்)



கொடிகாமம் மத்தி ஜே/327 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கணேசர் வீதிக்கு (பழைய உடையார் தெரு) நிறை வானகிராமம்திட்டத்தின்ஊடாக அண் மையில் அடிக்கல் நாட்டி வைக்கப் பட்டுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபி விருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு வீதிக்கான அடிக் கல்லை நாட்டி வைத்தார்.

(படம்:-சுபேசன்)



ஜனாதிபதியின் சிந்தனைக்கு அமைவாக நீர் மூலங்களை பாதுகாப்பதற்காக நாட ளாவிய ரீதியில் பத்து இலட்சம் மரக்கன்றுகள் நடும் சமூக “ஹரித அபிமானி” தேசிய மர நடுகை வேலைத் திட்டம் 2020 முல்லைத் தீவில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

(படம்:-தவசீலன்)



குப்பிழான் தெற்கு வீரமனை குறிஞ்சிக்குமரன் சனசமூக நிலை யத்தின் ஏற்பாட்டில் மர நடுகைச் செயற்பாடு குப்பிழான் கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயச் சுற்றாட லில் அண்மையில் முன்னெடுக் கப்பட்டது. இதன்போது இலுப்பை, மருது, சமண்டலை, தேக்கு, புங்கன் ஆகிய பல்வேறு வகையான மரக் கன்று கள் நாட்டப்பட்டன.

(படம்:-ரவிசாந்)



மன்னார் மாவட்டத்தில் மண்வாசனை அமைப்பி னூடாக தெரிவு செய்யப்பட்டபாடசாலை மாணவர்களுக் கான கற்றல் உபகரணங்கள் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வைத்து நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

(படம்:-ஜோசப்நயன்)




வீட்டுத்தோட்ட காணிகளை அடையாளப்படுத்தல் மற்றும் வரைபடமாக்கல் ஆய்வு வேலைத்திட்டத்தில் பணியாற்றிய காணிப்பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:-தவசீலன்)



கல்விக்கு கைகொடுப்போம் என்ற திட்டத்தின் ஊடாக தென்மராட்சி சேவை நிறுவனம் (கனடா) அறவழி போராட்டக் குழுவுடன் இணைந்து 65 பாடசாலை மாணவர்களுக்கு கல் வித்திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வு அண்மையில் அறவழி போராட்டக் குழுத்தலைவர் ஜீ.தங்கவேல் தலைமையில் கைதடி நுணாவிலில் அமைந்துள்ள அறவழி மண்டபத் தில் இடம்பெற்றது.

(படம்:-சுபேசன்)



ரத்னம் அறக்கட்டளை யின் அனுசரணையில் Child first UK நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் Center For Child Development நிறுவனம் நடைமுறைப்ப டுத்திவரும்விசுவமடு திறன் விருத்தி நிலையத்தில் திறன் வகுப்பறைக் கட்ட டம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள் ளது.

(படம்:-தவசீலன்)



கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு கிறீன் பீல்ட் சன சமூக நிலைத்தினரால் 120 மாணவர்களுக்கு கற் றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

# பேருந்து சேவைகளை வழங்குமாறு ஒதியமலைக் கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்திற்கு பேருந்து சேவையினை நடத்துமாறு அக்கிராம மக்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 1984ஆம் ஆண்டிற்கு முன்னர் முல்லைத்தீவு நகரத்தில் இருந்து தண்டுவான் வழியாக ஒதியமலைக் கிராமத்திற்கு ஆறு தடவைகள் பேருந்து சேவைகள் இடம்பெற்றன.

1984ஆம் ஆண்டு கிராம மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்ததன் பின்னர் இக்கிராமத்திற்கான பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை. 2009 ஆம் ஆண்டின் பின்னர் மீளக்குடியேறினர்.

தற்போது இக் கிராமத்தில் சுமார் எண்பது குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் நெடுங்கேணி மற்றும் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் நகரத்திற்கும் சென்று வருகின்றனர்.

பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக போக்குவரத்து நெருக்கடியினை ஒதியமலைக் கிராமமக்கள் எதிர்கொண்டுள்ளனர். இக்கிராமத்திற்கான பேருந்து சேவைகளை நடத்தும் படி ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்திற்கு பேருந்து சேவை இடம் பெறுவதில்லை எனக் காரணம்காட்டி இக் கிராமத்திலுள்ள பாடசாலைக்கு ஆசிரியர்கள் வருகைதருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

அத்துடன் நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைகளுக்கு நோயாளர்கள் செல்வதில் சிரமங்களும் உள்ளன.

இந்நிலையில் 1984 ஆம் ஆண்டிற்கு முன்னர் முல்லைத்தீவு நகரில் இருந்து ஒதியமலைக் கிராமத்திற்கு நடைபெற்ற பேருந்து சேவை போன்று தற்போதும் நடத்துவதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஒதியமலை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-350)

# ஒரு இலட்சம் வேலை வாய்ப்பிற்கான இரண்டாம் கட்ட நேர்முகத் தேர்வு

(குருமன்காடு)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கான ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கான நேர்முகத் தேர்வின் இரண்டாம் கட்டம் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.


இந்நேர்முகத் தேர்வு நேற்றும் நேற்று முன்தினமும் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் முதல் தேர்வில் 112 பேருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

இந் நிலையில் இரண்டாம் கட்டமாக 200 பேருக்கான நேர்முகத் தேர்வுகள் வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த நேர்முகத் தேர்வில் விண்ணப்பதாரிகளை நேர்முகம் காண்பதற்காக அரச உத்தியோகத்தர்களுடன் இராணுவத்தினரும் இணைக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகள் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் தலைமையில் இராணுவத்தினரின் பிரசன்னத்துடன் இடம்பெற்றது. (5-4-250)

# புத்தாக்கக் கண்டுபிடிப்பாளர்கள்



(குருமன்காடு)


வவுனியா மாவட்டத்தின் இளம் கண்டுபிடிப்பாளர்களை தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யும் நிகழ்வு இளைஞர் சேவைகள் மன்றத்தில் நேற்று இடம்பெற்றது.

மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளின் புத்தாக்கத்தினை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லும் முகமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் புத்தாக்க கண்டுபிடிப்புக்களை தெரிவு செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நெடுங்கேணி, செட்டிகுளம், வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 7 இளம் கண்டு பிடிப்பாளர்கள் தமது கண்டு பிடிப்புக்களை காட்சிப்படுத்தி அது தொடர்பில் விளக்கமும் அளித்தனர். குறித்த கண்டு பிடிப்புக்களில் மூன்று கண்டு பிடிப்புக்கள் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்டு தேசிய போட்டிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஐ.சுகானி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.தபேந்திரன், வவுனியா பல்கலைக்கழக வவுனியாவளாக விஞ்ஞான பீட விரிவுரையாளர் எஸ்.கார்த்தீஸ்வரன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வட மாகாண பணிப்பாளர் சிசிரகுமார, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.ரி.சி. காமினி ஆகியோர் கலந்து கொண்டு இளம் கண்டு பிடிப்பாளர்களை தெரிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-250)

# வேகக் கட்டுப்பாட்டையிழந்து தடம்புரண்ட பாரவூர்தி



(கரணவாய்)

இயக்கச்சி சந்தி பகுதியில் தேங்காய் ஏற்றிவந்த பாரவூர்தி வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியது.

குறித்த விபத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. விபத்தில் பாரவூர்தியை செலுத்திவந்த சாரதி அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தார். (5-4-60)


# மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நால்வர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோப்பளை பகுதியில் அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 4 டிப்பர்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

பளை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை இடம் பெற்றது.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணரட்ன தெரிவித்துள்ளார். (5-4-316)



**கிளிநொச்சி கரைச்சி சமுர்த்தி வங்கி கணனிமயப்படுத்தப்பட்ட சேவைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரைச்சி பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி குழுக்களின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் இணையவழி வங்கி நடைமுறை சேவையை ஆரம்பித்து வைத்தார். கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ரி. ஆரணி மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.**

**(படம்- சப்தசங்கரி)**

# பாலம் அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை



(நெளுக்குளம்)

வவுனியா நொச்சிமோட்டை புதிய சின்னக்குளம் வீதியில் பாலம் அமைக்கப்படாமையினால் அவ்வீதியூடாக பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள நொச்சிமோட்டை குளம் முழு கொள்ளளவையும் எட்டியுள்ள நிலையில் அதன் மேலதிக நீர் சுருங்கை வழியாக குறித்த பாதையூடாகவே செல்கின்றது.

இதன்போது பாதையில் 4 அடிக்கு மேல் நீர் நிரம்பிக் காணப்படும். இதனால் இவ் வீதியை பயன்படுத்தும் கிராம மக்கள் மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலேயே தமது பயணங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த வீதி மாமடு, கள்ளிக்குளம், துவரங்குளம், சின்னப்புதுக்குளம் உட்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பொது மக்கள் தினமும் பயன்படுத்தும் வீதியாகும்.

ஒவ்வொரு வருடமும் மழை காலங்களில் பயணிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இது தொடர்பாக அரசியல்வாதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு பலமுறை தெரியப்படுத்தியும் இதற்கான தீர்வினை பெற்றுத் தரவில்லை.

எனவே பலவருடங்களாக நீடித்து வருகின்ற இப்பிரச்சினைக்கு பாலம் ஒன்றை அமைத்து தீர்வினை பெற்றுத் தருமாறு அதனூடாக பயணிக்கும் பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (5-299)

## இராசிபலன்

31.12.2020
மார்கழி 16, வியாழக்கிழமை
பிரதமை முற்பகல் 10.06 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 8.33 மணிவரை
சுபநேரம் 7.59-9.29 மணிவரை
இராகுகாலம் 1.57-3.29 மணிவரை
சந்திராஷ்டமம்: மூலம், பூராடம்

வளவன்


மேஷம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


ரிஷபம்

நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, போசன சுகமுண்டு.


மிதுனம்

உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.


கடகம்

விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.


சிம்மம்

தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி

செல்வ நிலை உயரும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.


துலாம்

முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.


விருச்சிகம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துகளால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


தனுசு

பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டுபிடிக்கலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம்.


மகரம்

விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


கும்பம்

உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


மீனம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

பல தடை உடையவனே வாழ்க்கையில் முன்னேறுவான்

# அழியும் பேராபத்தில் சிங்கராஜவனம்

(கொழும்பு)

ஈரவலய காடுகளில் ஒன்றாக கருதப்படும் சிங்கராஜ வனாந்தரம் மனித செயற்பாடுகளால் அழிவுக்குட்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் 1978 ஆம் ஆண்டு கட்டாய கமத்தொழில் திட்டத்திற்கிணங்க சில குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 2 1/2 ஏக்கர் காணியில் பயிர் செய்யும் விவசாயிகள் சிங்கராஜ வனாந்தரத்தை சட்டவிரோதமாக விஸ்தரித்திருப்பதாக சுற்றாடல் ஆர்வலர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன் மூலிகை மரங்கள் மற்றும் பெறுமதி மிக்க மரங்களை வெட்டி வியாபாரம் செய்யும் நபர்களால் சிங்கராஜ வனாந்தரத்தின் பெரும் பகுதி படிப்படியாக அழிக்கப்பட்டு வருவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையின் அரிய பொக்கிஷங்களில் ஒன்றான சிங்கராஜ வனாந்தரத்தின் பாந்துராஎல எனும் பிரதான நீரூற்றிலிருந்து விரிந்து செல்லும் பசுமையான சிற்றாறுகளும் மதுருகந்த ரேனகந்த வனங்களும் தற்போது பாதிப்புகளை எதிர் கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

யுனெஸ்கோ நிறுவனத்தின் சர்வதேச மரபுரிமையை உறுதிப்படுத்தியுள்ள இந்த வனாந்தரத்தின் பெருமையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நாட்டு மக்கள் அனைவரினதும் பொறுப்பாகும் என மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஜ-4)

# சடலங்கள் விவகாரம் அறிக்கை சமர்ப்பிப்பு




(கொழும்பு)

கொரோனா வைரஸ்தொற்று காரணமாக உயிரிழக்கும் நபர்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதா அல்லது தற்போதும் தொடரப்படும் தகனம் மட்டும் எனும் நிலைமையை தொடர்வதா என்பது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவொன்றின் அறிக்கை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த 9 பேர் அடங்கிய நிபுணர்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் ஜெனிபர் பெரேராவினால் இவ்வறிக்கை கடந்த திங்கட்கிழமை மாலை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் என்ன என்பதை உறுதியாக அறிய முடியவில்லை. எவ்வாறாயினும் குறித்த 9 பேர் கொண்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தீர்மானத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (ஜ-4)

# கந்தளாய் விமான விபத்து தொடர்பில் ஆராய சீனாவின் உதவியை நாடும் இலங்கை



(கந்தளாய்)

கந்தளாய் - சூரியபுர பகுதியில் அண்மையில் வான்படைக்கு சொந்தமான விமானம் விபத்துக்குள்ளானமை தொடர்பில் ஆராய சீன நிபுணர்களின் உதவிகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என விமானப்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வான்படைக்கு சொந்தமான பீ.ரீ.6 ரக பயிற்சி விமானம் கடந்த 15 ஆம் திகதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 23 வயதான விமானி ஒருவர் உயிரிழந்தார். குறித்த விமானம் சீன நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இது தொடர்பான விசாரணைகளில் சீன நிபுணர்களின் உதவிகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பிரிட்டனில் புகலிடம் கோரியுள்ள இலங்கையர்கள்

(கொழும்பு)

தமக்கு இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு 6718 இலங்கையர்கள் பிரித்தானியாவில் புகலிடம் கோரியுள்ளனர்.

பாதுகாப்பு தரப்பினர் மற்றும் அரசியல்வாதிகளினால் தமக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாக தாங்கள் விண்ணப்பத்திருக்கும் புகலிடக் கோரிக்கையில் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டு காலப் பகுதியில் 6718 இலங்கையர்கள் இவ்வாறு புகலிட அந்தஸ்து கோரி பிரித்தானிய குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வாறு புகலிடம் கோரி விண்ணப்பம் செய்தவர்களில் 144 பேருக்கு இதுவரையில் அரசியல் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசியல் புகலிடம் வழங்கப்பட்டவர்களில் 90 வீத மானவர்கள் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மலேசிய இராணுவ வலைத்தளங்களில் சைபர் தாக்குதல்

(கோலாலம்பூர்)
மலேசிய ஆயுதப் படைக்கு சொந்தமான வலைத்தளங்களில் சைபர் தாக்குதல் நடந்துள்ளதாக மலேசிய பாதுகாப்பு படைகளின் தலைவர் அபெண்டி புவாங் கூறினார்.

மலேசிய இராணுவத்துக்கு சொந்தமான பல்வேறு வலைத்தளங்களில் 'ஹக்கர்கள்' ஊடுருவி ரகசிய தகவல்களை திருட முயற்சித்ததாகவும் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் கூறுகையில், "மலேசிய ஆயுதப் படைக்கு சொந்தமான வலைத்தளங்களில் சைபர் தாக்குதல் நடந்ததை நாங்கள் உறுதி செய்துள்ளோம். எனினும் இராணுவத்தின் இரகசிய தகவல்கள் திருடப்படாமல் பாதுகாக்கப்பட்டன என அவர் தெரிவித்தார். (நி)

## 21 இலட்சம் பேருக்கு அமெரிக்காவில் போடப்பட்டது தடுப்பூசி

(வோஷிங்டன்)
அமெரிக்காவில் 21 இலட்சத்து 27 ஆயிரத்து 143 பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தேசிய நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

உலக அளவில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்கா உள்ளது. அங்கு 1.92 கோடி பேர் தொற்றுக்கு உள்ளாகி இருப்பதுடன், 3.34 இலட்சம் பேர் மரணத்தை தழுவியிருப்பதாகவும் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக தரவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொரோனாவைக் கட்டுப்படுத்த அமெரிக்க அரசு தடுப்பூசி பயன்பாட்டுக்கு ஒப்புதல் அளித்திருந்தது.

அதன்படி அங்கு பொது மக்களுக்கு வேகமாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. (நி)

## இலக்கிய திருவிழாவில் பங்கேற்கிறார் மலாலா



(டுபாய்)
டுபாயில் அடுத்த மாதம் நடைபெறும் இலக்கிய திருவிழாவில் இளம் வயதில் நோபல் பரிசு பெற்ற மலாலா பங்கேற்று உரையாற்றவுள்ளார்

மலாலா யூசப்சையி (வயது 23) கடந்த 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி பாகிஸ்தானில் உள்ள மிங்கோரா என்ற ஊரில் பிறந்தவர். அந்த ஊரில் தலிபான் பயங்கரவாதிகளால் பெண்கள் பாடசாலைகளுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. இவர் தனது 12 வயதில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் 9 ஆம் திகதி ஒரு பெண்ணாக பாடசாலைக்குச் சென்றதால் தலிபான் பயங்கரவாதிகளால் துப்பாக்கியால் சுடப்பட்டார்.

இந்தச் சம்பவம் அவர் ஒரு போராளியாக மாற வித்திட்டது. அதன்பின் லண்டனில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். அதன் பிறகு உலக அளவில் பெண்கள் கல்வி மற்றும் முன்னேற்றத்திற்காக இளம் வயதில் போராட ஆரம்பித்தார். இதற்காக தன் பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவினார். தொடர்ந்து அவருக்கு 2014 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. உலகிலேயே இளம் வயதில் நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## புதிய வைரஸ் தொற்றால் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன

(லண்டன்)
தென்னாபிரிக்காவிலும் உருமாறிய கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுகிறது.

அங்கிருந்துதான் இங்கிலாந்துக்கு இந்தப் புதிய கொரோனா பரவியதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

தினமும் இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கில் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். நேற்று ஒரே நாளில் உச்ச அளவாக 53 ஆயிரம் பேர் புதிய வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் வைத்திய சாலைகள் நிரம்பி வழிகின்றன. அவசர சிகிச்சை பிரிவு முடங்கி உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இடப் பற்றாக்குறையால் வைத்தியசாலைகளுக்கு வெளியே கூடாரங்கள் அமைத்து நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (நி)

## குரேசியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏழு பேர் உயிரிழப்பு;20 பேர் படுகாயம்!

(ஜாக்ரெப்)
ஐரோப்பிய நாடான குரேசியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளனர்.





ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான குரேசியாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 6.4 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியது.

இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்ததுடன், 20 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.மேலும் பலர் மாயமாகியுள்ளனர்.


இதையடுத்து அப்பகுதியில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (நி)

## கொரோனாவை உலகிற்கு வழங்கிய வுஹானில் தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கியது

(பீஜிங்)
கொரோனாவை உலகுக்கு தந்த வுஹான் நகரிலும் கொரோனாத் தடுப்பூசி போடும் பணி தொடங்கியுள்ளது. அங்கு சில முக்கிய குழுக்களுக்கு தடுப்பூசி போடப்படுகிறது.

சீனாவில் உள்ள வுஹான் நகரில்தான் கடந்த ஆண்டு இதே மாதம் கொரோனா வைரஸ் உருவானது. இப்போது 200 இற்கும் மேற்பட்ட உலக நாடுகளை கொரோனா வைரஸ் பாடாய்ப்படுத்தி வருகிறது.

கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டு அவற்றைப் போடும் பணி முன்னேறிய நாடுகளில் தொடங்கி விட்டது.



கொரோனாவை உலகுக்கு தந்த வுஹான் நகரிலும் கொரோனாத் தடுப்பூசி போடும் பணி தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 30 வருட சிறைவாசத்தின் பின் பொலார்ட் நாடு திரும்பினார்



(வோஷிங்டன்)
அமெரிக்காவின் முன்னாள் கடற்படை ஆய்வாளர் 30 வருட சிறை வாசத்தினை முடித்து மீண்டும் இஸ்ரேல் திரும்பியுள்ளார்.

இஸ்ரேலின் உளவாளியாகச் செயற்பட்ட குற்றத்திற்காக அமெரிக்காவினால் சிறை பிடிக்கப்பட்ட 66 வயதான ஜொனாத்தன் பொலார்ட் ஏறக்குறைய 30 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் எனப் பலராலும் குரல் எழுப்பப்பட்டது.

கடந்த 1987 ஆம் ஆண்டு உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாக அவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று இஸ்ரேலை வந்தடைந்துள்ளார்.

பொலார்டின் விடுதலைக்கு, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பல நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நாட்டை வந்தடைந்த பொலார்ட் மண்ணை முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். (நி)

# மாகாண சபை முறைமை தொடர்பில் இந்தியாவுடன் பேசித் தீர்மானிக்க வேண்டும்



**(கொழும்பு)**

**மாகாணசபை முறைமையை தொடர்ந்தும் செயற்படுத்துவதா? இல்லையா? என்பது எம்மால் தன்னிச்சையாக எடுக்கப்படக்கூடிய தீர்மானம் அல்ல. இவ்விடயம் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதன் ஊடாக தீர்மானிக்கப்பட வேண்டியதொன்றாகும். அவ்வாறில்லை என்றால் சர்வதேச மட்டத்தில் எதிர்வரும் காலங்களில் மீண்டும் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளின் தலைவர்களின் பங்கேற்புடன் கடந்த திங்கட்கிழமை மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஆளுங் கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே தயாசிறி ஜயசேகர இதனைக் கூறினார்.

கொவிட் பரவல் தீவிரமடைந்துள்ளதால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனினும் மாகாணசபைகளை மீண்டும் மேலும் வலுப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் எவ்வாறு துரிதமாக மாகாண சபைகளை வலுப்படுத்துவது என்பது குறித்து மீண்டும் ஆளுங்கட்சி தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டு அதில் ஆராயப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

மாகாணசபை தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக பௌத்த மதத் தலைவர் தொடர்ந்தும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றமை தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட போதே இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டியமை குறித்து அவர் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது அத்தியாவசியமானதாகும். மாகாணசபை முறைமையை தொடர்ந்தும் செயற்படுத்துவதா? இல்லையா? என்பது எம்மால் தனித்து எடுக்கப்படக் கூடிய தீர்மானமல்ல. காரணம் இது இந்தியாவுடன் கலந்துரையாடப்பட வேண்டிய விடயமாகும்.

அவ்வாறில்லை என்றால் எதிர்வரும் காலங்களில் சர்வதேச மட்டத்தில் மீண்டும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

---

# உக்ரேய்னிலிருந்து வந்த 3 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

உக்ரேய்னில் இருந்து இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளில், 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பி.ப 2.06 மணியளவில் சுற்றுலாப் ப யணிகளுக்காக விமான நிலையங்கள் திறக்கப்பட்டதன் பின்னர் 180 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கைக்கான முதல் உக்ரேய்னிய பயணிகள் விமானம் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தது.

மேலும், கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக மேற்படி சுற்றுலாப்பணிகள் நாட்டிற்குள் அழைத்து வரப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே அவர்களில் 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக இதுவரை காலமும் விமான நிலையச் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே, மேற்படி உக்ரேய்னிய பயணிகள் நாட்டிற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

---

# 50 பேருந்துகளின் அனுமதிப்பத்திரம் இரத்து

(கொழும்பு)

உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத 50 பேருந்துகளின் பயண அனுமதிப் பத்திரங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத பேருந்துகள் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்துவதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஜ-4)



---

# தனிமைப்படுத்தலை மீறி விருந்துபசாரம்?

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக சில்வா தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி விருந்துபசாரம் நடத்தினார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நத்தார் பண்டிகைக்கு சில தினங்களுக்கு முன்னதாக முக்கிய பிரமுகர்களை அழைத்து இந்த விருந்துபசாரத்தை வழங்கியுள்ளதாக புகைப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

மாலக சில்வா ஏற்பாடு செய்திருந்த இந்த விருந்துபசாரம் தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தற்பொழுது விபரங்களை திரட்டி வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பனவற்றின் முக்கியஸ்தர்கள் இந்த விருந்துபசாரத்தில் பங்கேற்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க, நவீன் திஸாநாயக்க, ரவி கருணாநாயக்க உள்ளிட்டவர்கள் இந்த விருந்துபசாரத்தில் பங்கேற்றிருக்கும் புகைப்படங்கள், மாலக சில்வாவின் முகநூல் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மாலக சில்வா தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி விருந்துபசாரம் நடத்தினாரா? என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

---

# தண்டனை குறைப்பு;கைதிகளின் பெயர்ப்பட்டியல் ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

சிறைக்கைதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளை குறைக்கும் திட்டத்தின் கீழ், சுமார் 450 கைதிகளின் தண்டனைகள் குறைக்கப்படவுள்ளன.

தண்டனைகளை குறைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட கைதிகளின் பெயர்ப்பட்டியல், ஜனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதுடன் உடனடியாக கைதிகளுக்கான தண்டனைகள் குறைக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அந்த தண்டனை 20 வருடங்கள் வரை குறைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

---

# மகர மோதல் நீதிமன்றின் உத்தரவு

(கொழும்பு)

மகர சிறைச்சாலை மோதலில் உயிரிழந்த பின்னர் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட 4 கைதிகளின் சடலங்களைத் தகனம் செய்யுமாறு வத்தளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஜ-4)

---

# குணமடைந்தோர் 33,925

(கொழும்பு)


கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 698 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று புதன்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 33 ஆயிரத்து 925 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரையில் 42 ஆயிரத்து 63 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 7 ஆயிரத்து 245 பேர் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 195 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆயுதங்கள் மீட்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் முந்திரியத் தோட்டம் ஒன்றில் மரத்தின் கீழ் பாதுகாப்பாக பொலித்தீனை ஒன்றினால் சுற்றி வைக்கப்பட்டிருந்த ரி-81 ரக துப்பாக்கி 49 ரவைகள் 2 மகசீன்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய மட்டக்களப்பு விசேட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையில் பொலிஸ் குழுவினர் சம்பவ தினமான நேற்று ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சந்திவெளியில் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள முந்திரிய தோட்டம் ஒன்றில் சோதனை நடவடிக்கையின் போது மரம் ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவை மீட்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# சடலங்கள் அடக்கம் தீர்மானிக்கப்படவில்லை



(கொழும்பு)

கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு எந்தத் தீர்மானமும் இதுவரையில் எடுக்கப்படவில்லை எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வது என்ற முடிவில் எந்த சூழ்நிலையிலும் இதுவரை மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாற்றங்கள் இருந்தால் அது குறித்து பொது மக்களிற்கு தெரியப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# கொரோனாத் தடுப்பூசி விவகாரம்; 4 மில்.மக்களுக்கு வழங்க வேண்டும்




(கொழும்பு)

கொரோனா தடுப்பூசி முதன் முதலில், சுமார் 4 மில்லியன் மக்களுக்கு வழங்க வேண்டிய தேவையுள்ளதாக இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

தற்போது தயாரிக்கப்படுகின்ற தடுப்பூசிகளில் ஒன்றை உலக சுகாதார ஸ்தாபனத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நாட்டில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் தடுப்பூசியை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் தடுப்பூசி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கு தேவையான அளவில் கொரோனா தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்துடன் கலந்துரையாடி, நாட்டிற்கு பொருத்தமான தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2195

Search for people, places and things

### தயாளன்



இவனுங்க சுருட்டி கொடுக்கிற காலண்டரை நேராக்கி சுவரில் மாட்டுவதற்குள்அடுத்த நியூ இயர் வந்திடும் போல...

### திவான்

நீயும் அந்த 2020 மாதிரி ஆயிடாதப்பா




சாச் சா அவனாவது மார்ச் ல இருந்து தான் ஆரம்பிச்சான் நான் ஜனவரியே ஆரம்பிச்சுடுவன்

### லக்சிகா

என்ன சேர் தலையில கட்டு?
மனைவி பாத்ரூமில வழுக்கி விழுந்துட்டா?
அதற்கு நீங்க ஏன் கட்டுப்போட்டிருக்கிறீங்க?
இல்ல அவ விழுந்தத பாத்து நான் கொஞ்சம் சிரிச்சுட்டன்...

### கவிஷ்ணயி

மூன்றும் மூன்றும் சேர்ந்தால் ஆறு வரும். ஆறும் ஆறும் சேர்ந்தால்



வெள்ளம் வரும் சேர்...

### றேணு

பேச்சுலர் வாழ்க்கை தான் ஜாலியானது மச்சான்...




பொண்ணு கிடைக்கலன்னு சொல்லித் தொலைடா...

### சந்துரு

சீனாவில் போன வருடம் இதே மாதம் கொரோனா முதல் பாகம் ரிலீஸ்



இந்த வருடம் அதே மாதத்தில் கொரோனாவின் இரண்டாவது பாகம் பிரிட்டனில் ரிலீஸ்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரசாங்கம் அரசியல் பழிவாங்கல் செய்திருந்தால் பலர் இன்று சிறைகளில் இருந்திருப்பர்


## பாதுகாப்பு செயலாளர் சாடல்

**(கொழும்பு)**

**குற்றப்புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர போன்றோர் எவ்வாறு தமது சேவையை ஆற்றினார்கள் என்பதை முழு நாடும் அறியும். தற்போதைய அரசாங்கத்தில் யாரும் அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்படவில்லை. அவ்வாறு அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டிருந்தால் பெருமளவானோர் இன்று சிறைகளிலிலேயே இருந்திருப்பார்கள் என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஜெனரல் நிலைக்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை தலதாமாளிகைக்குச் சென்று மத வழிபாடுகளில் பங்கேற்று ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் பழிவாங்கலுக்குச் செல்லவில்லை. நாம்



அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டிருந்தோமானால் இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் சிறைகளிலேயே இருப்பார்கள். ஆனால் நாம் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. நிரூபிக்கப்பட்ட விடயங்களினாலேயே சிலர் சிறையிலுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் இதற்கு முன்னர் அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து அவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது என தெரிவித்தார். (ஐ-4)

# கட்டட கீழ்தளம் நீரில்; ஒருவர் பரிதாபமாகப் பலி

(கொழும்பு)

கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் கட்டடம் ஒன்றின் கீழ்தளம் நீரில் மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு பெய்த மழையினால் கொள்ளுப்பிட்டி - டுப்ளிகேஷன் வீதியில் நிர்மாணிக்கப்பட்டு

## ஐவர் மீட்பு

வரும் கட்டடம் ஒன்றின் கீழ் தளமே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளது.

குறித்த கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதேநேரம் குறித்த கட்டடத்தின் கீழ்தளத்தில் மேலும் 5 பேர் சிக்கி இருந்த நிலையில் அவர்கள் நேற்றுக் காலை பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ-4)

# இந்திய விமானங்களை இடைநிறுத்தத் தீர்மானமில்லை

புதிய கொவிட்-19 தொடர்பிலான அச்சத்தில், இந்தியாவிலிருந்து விமானங்களை இடைநிறுத்தும் எந்தவிதத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியா, சிங்கப்பூரில் புதிய கொவிட்-19 கண்டுபிடிக்கப்பட்டதான அறிக்கைகளுக்கு மத்தியில், இந்தியா, சிங்கப்பூரிலிருந்து விமானங்களை இடைநிறுத்தும் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா, சிங்கப்பூரிலிருந்து குறைந்தளவு விமானங்களே வருவதாக சுட்டிக்காட்டிய இதே வேளை, எதிர்கால நடவடிக்கைகளைப் பொறுத்து தேவையான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென்றும் தேவைப்பட்டால் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கை தனது எல்லைகளை கடந்த 28 ஆம் திகதி முதல் திறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சரத் சந்திரரின் நகைச்சுவை உணர்வு

வங்க நாவலாசிரியர் சரத் சந்திரர். ஒரு நண்பர் அவரிடம் வந்தார். வழக்கமாக எல்லா எழுத்தாளர்களிடையேயும் கேட்கின்ற ஒரு கேள்வியைக் கேட்டார். நீங்கள் எழுத்துத் துறைக்கு வந்தது எப்படி? இதுதான் கேள்வி.

அதைத் தெரிந்து என்ன பிரயோசனம்? என்றார் சரத் சந்திரர். சும்மா சொல்லுங்களேன் தெரிந்து கொள்கின்றேன் என்றார் வந்தவர். சரி சொல்கின்றேன் என்று ஆரம்பித்தார்.

நான் ரங்கூனிலே வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். சம்பளம் போதவில்லை. வேலையும் பார்த்துக் கொண்டு ஒரு பலசரக்குக் கடை வைக்கலாம் என்று நினைத்தேன். என்னாலே மளிகைக் கடை வைத்து சரியாக நடத்த முடியுமா? என்கின்ற சந்தேகம் என் மனைவிக்கு..

அதை சோதனை செய்து பார்க்க வேண்டும் என்பதற்காக சில பொருட்களின் அளவு... அதனுடைய விலை இப்படி சிலவற்றை சொல்லி எல்லாவற்றையும் மனக் கணக்காகக் கூட்டி போடச் சொன்னார்கள். என்னாலே சரியாக கூட்டிச் சொல்ல முடியவில்லை.

உங்களால் மளிகைக்கடை நடத்த முடியாது என்று சொல்லி விட்டார்கள். என்ன செய்கிறது. வேறு வழி இல்லை...கதை எழுத ஆரம்பித்து விட்டேன் என்றார். கேட்டவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

சரத் சந்திரர் ஒரு பக்கம் சீரியஸான நாவல்கள், சிறு கதைகள் எழுதியிருந்தாலும் அவருடைய இன்னொரு பக்கம் வேறுவிதம்.

நண்பர்களிடம் பேசும்போதும் சரி... அவர்களுக்குக் கடிதங்கள் எழுதும் போதும் சரி கேலியும்–கிண்டலும்–நகைச்சுவை உணர்வும் அதிகமாக இருக்கும்.

காந்திஜி ஒரு சமயம் கல்கத்தாவுக்கு வந்திருந்தார். தேச பக்தர்கள் பலபேர் அவரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சரத் சந்திரரும் அங்கே இருந்தார். கிரண்சங்கர்ராய் என்பவரும் அங்கே இருந்தார். அவர் சொன்னாராம்...

காந்திஜியுடன் பழகிய முதல் வங்காளி நான் தான். போயர் யுத்த காலத்திலே இவர் லண்டனுக்கு வந்திருந்த பொழுது என்னிடம் தான் வங்காள மொழி கற்றுக் கொண்டார் என்றார்.

உடனே சரத் சந்திரர் காந்திஜியைப் பார்த்து... இவர் உங்களுக்கு வங்காள மொழி கற்றுக் கொடுத்தது உண்மைதானா? என்றார்.

ஆமாம் என்றார் காந்திஜி. அதனால் தான் உங்களால் வங்காள மொழி கற்றுக் கொள்ள முடியவில்லை. என்றார். எல்லோரும் சிரித்தார்களாம். சரத் சந்திரர்– சாம்தா பேர் என்கின்ற கிராமத்திலே தங்கியிருந்தார். ஓர் இலக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகத்தான் கல்கத்தாவுக்குப் போக வேண்டியிருந்தது. அதற்காகப் புறப்பட்டார்.

அந்த சமயத்திலே பின்னாலிருந்த யாரோ அவரைக் கூப்பிட்டிருக்கின்றார்கள். இப்படி கூப்பிட்டவரைப் பார்த்து இன்னொருத்தர் யாரோ அதட்டியிருக்கின்றார்கள் போகின்றவரை ஏன் கூப்பிடுகிறீர்கள் என்று.

ஏன் கூப்பிட்டால் என்ன? என்று கேட்டிருக்கின்றார் சரத் சந்திரர். புறப்படுகின்றவர்களை பின்னால் இருந்து கூப்பிடுவதற்கு அபசகுணம். போற இடத்திலே ஏதாவது ஆபத்து வரலாம் என்று அதற்கு விளக்கம் கொடுத்திருக்கின்றார் அவர். உடனே சரத் சந்திரர் சொன்னாராம்...

இதோ...இவர்கள் என்னை இலக்கியக் கூட்டத்திற்கு அழைத்துக் கொண்டு போகின்றார்கள். இதைவிட வேறு என்ன ஆபத்து வந்துவிடப் போகின்றது என்றாராம்.

இப்படி சரத் சந்திரருக்கு இயல்பாகவே நகைச்சுவை உணர்வு உண்டு. அவருடைய நண்பர் ஒருத்தர் வீட்டுக்கு கூப்பிட்டிருந்தார். அங்கே ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். சரத் சந்திரருக்கு இயல்பாகவே கச்சேரியிலே நீண்ட ஆலாபனையெல்லாம் கேட்க பொறுமை இருக்காது. அதனால் மெதுவாக பாடப் போகின்றவர் எப்படி என்று கேட்டிருக்கின்றார்.

அவருக்கு மிகவும் நன்றாகப் பாடத் தெரியும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு சரத் சந்திரர் அவருக்குப் பாடத் தெரியும் என்பது சரி... பாட்டை நிறுத்தத் தெரியுமா? அதைச் சொல்லுங்கள் முதலில் என்றார்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

33



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

போன்ற விடயங்களின் காரணமாக பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அப்பால் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை அனுப்புவதற்காக ஆவணங்களைப் பரிசோதனை செய்கின்றபோது வருகைதருகின்ற உத்தியோகத்தர்களும், பாராளுமன்றத்தின் பதவியணியினரும், பொலிஸ் உத்தியோகத்தர்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாதல் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிபிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அல்லது சம்பந்தப்பட்ட குழுவின் பணியகத்திற்கு தகவல்களை அனுப்புவதற்கும், அனுப்பப்பட்டுள்ள பெயர் இடாப்புக்களை திருத்த வேண்டியேற்படுகின்ற சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்ட ஆவணமென்பதை இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் முகப்புக் கடிதத்துடன் கூடிய ஆவணமொன்றை அல்லது இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும், திருத்தப்பட்டுள்ளமைக்கான குறிப்புகளுடன் திருத்தப்பட்ட மூலப் பிரதியையே அனுப்பி வைப்பதற்கும், ஒரே ஆவணத்தின் பல பிரதிகளை அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், அனுப்பி வைக்கப்பட்ட ஆவணம் உரியவாறு கிடைத்துள்ளதா? என்பதை மேற்குறிப்பிடப்பட்ட தொகைநகல் இலக்கங்கள் மூலம் அல்லது தொலைபேசி இலக்கம் 2777100 மூலம் (உள்ளக நீடிப்பு 5422, 5334 மற்றும் 5302) தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளுமாறும், தகவல் அடங்கிய ஆவணங்களை அனுப்பும்போது குறிப்பிட்ட சகல தகவல்களையும் உள்ளடக்கியதாக, குறைந்த பட்சம் ஒரு கடமை தினத்துக்கு முன்னர் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

5. குழுக்கள்/ கலந்துரையாடல்களில் பங்குபற்றும் உத்தியோகத்தர்கள் நேரகாலத்துடன் பாராளுமன்றத்துக்கு வருவதன் அவசியம்.

குழுக்கூட்டங்கள்/ கலந்துரையாடல்கள் ஒரே/ மிக அண்மித்த நேரங்களில் நடைபெறும் சந்தர்ப்பங்கள் பெரிதும் காணப்படுவதனால் அந்த சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு தேவைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை பாராளுமன்ற வளாகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அப்பால் அனுப்பிவைப்பதில் தாமதங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே, ஏதேனும் உத்தியோகபூர்வ கடமைக்காக உங்கள் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றத்துக்கு வரும் சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நேரத்தை விட குறைந்தபட்சம் 30 நிமிடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கருகில் உள்ள அனுமதிப்பத்திர கருமபீடத்துக்கு வருவதன் மூலம் தேவையற்ற தாமதங்களுக்குள்ளாவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

6. உத்தியோகபூர்வ கடமைகளுக்காக பாராளுமன்றத்துக்கு அடிக்கடி வரும் அரச உத்தியோகத்தர்களின் வசதி கருதி வருடாந்த/ நாளாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

**அமைச்சு செயலாளர்களுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்**

பாராளுமன்ற கூட்டங்கள் நடைபெறும் தினத்தில் அரச உத்தியோகத்தர்களின் கூடங்களுக்கு பிரவேசித்தல்/பாராளுமன்றக் குழுக்கள் அல்லது பாராளுமன்றத்தின் வேறு குழுக்களில் கலந்து கொள்வதற்காக அல்லது வேறு வகையிலான கடமைகளுக்காக பாராளுமன்றத்துக்கு வருகை தரும் அரச உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்கென அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அரச உத்தியோகத்தர் கூடத்துக்கு, கடமை நிமித்தம் பாராளுமன்ற கலரிக்கு அல்லது அமைச்சரொருவரின் அறைக்கு அல்லது பிறிதொரு இடத்துக்கு அல்லது பாராளுமன்ற குழுக் கூட்டங்கள்/ வேறு குழுக் கூட்டங்கள்/ வேறு கடமைகளுக்கு கலந்துகொள்ளும் பொருட்டு பாராளுமன்றத்துக்கு வருகைதரும் அரச உத்தியோகத்தர்களுக்கு பிரவேசத்திற்கான அனுமதியை வழங்குவதற்கு, ஏற்புடைய அமைச்சுச் செயலாளரின் சிபார்சுக்குட்பட்டு, படைக்கலச்சேவிதருக்கு கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் உரிய தினத்துக்கு செல்லுப்படியாகும் நாளாந்த பிரவேச அனுமதியை படைக்கலச் சேவிதரிடமிருந்து பெற முடியும்.

முற்றும்.

# வாள்வெட்டில் இளைஞன் பலி; சுற்றிவளைப்பில் ஐவர் கைது

(கொழும்பு)

அம்பாறை வீரமுனையில் வாள்வெட்டு குழு ஒன்று தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த நிலையில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி வீரமுனையில் முன் விரோதம் காரணமாக 10 பேர் கொண்ட குழுவினர் வீதியில் நின்ற இளைஞரை தாக்கியதில் 30 வயதுடைய இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தப்பிச் சென்றிருந்தனர். இதனையடுத்து சம்மாந்துறை பொலிஸ் நிலையக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் விசேட குழு மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)

# தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 28 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்புடுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட மேலும் 28 பேர் நேற்றுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதி பருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையிலாக காலப்பகுதி யில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற் பட்ட ஆயிரத்து957 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# புதிய தவிசாளர் பதவியேற்பு



(கொழும்பு)

தொம்பே பிரதேச சபையின் புதிய தலைவராக காரியப்பெருமகே பியசேன. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் நேற்று முன்தினம பதவியேற்றார்.

விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் குறித்த பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

தொம்பே பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மிலான் ஜயதிலக கடந்த பொதுத் தேர்தலின் ஊடாக பாராளுமன்றத்திற்குத் தெரிவானதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையில் காரியப்பெருமகே பியசேன அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.(ஜ-4)

# இராஜினாமா செய்தியில் உண்மை இல்லை

## மறுக்கிறார் நீதியமைச்சர்

(கொழும்பு)

தாம் அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக வெளியாகும் தகவலில் எவ்வித உண்மையும் இல்லையென நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.



நீதியமைச்சர் அலி சப்ரி அமைச்சுப் பதவியில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் இராஜினாமா செய்துள்ளதாக சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் வினவிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார். (ஜ-4)

# பொதுமக்கள் எந்தவிதத்திலும் அச்சமடையத் தேவையில்லை

(கொழும்பு)


வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக நாட்டை திறப்பது தொடர்பில் பொதுமக்கள் எந்த விதத்திலும் அச்சமடையத் தேவையில்லை எனச் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மத்தள சர்வதேச விமான நிலைய வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் பூரண சுகாதார வழிமுறைகளுக்கு அமையவே நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். 30 லட்சத்திற்கும் அதிகமானோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுற்றுலாத் தொழில்துறையை நம்பி, தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)



# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## ஆரோக்கியம் தரும் ஆலய வலம்

**கோ**விலுக்குச் சுவாமி கும்பிட செல்பவர்களில் பலர் ஆலய பிரகாரத்தைச் சுற்றி வலம் வருவது இல்லை.

கருவறையில் உள்ள மூலவரை மட்டும் வணங்கி விட்டு கடமை முடிந்து விட்டதாக வீடு திரும்பி விடுகிறார்கள். இது மிகப்பெரிய தவறு.

ஆலயத்தில் உள்ள முக்கியமான அம்சங்களில் பிரகாரங்களும் ஒன்றாகும். பிரகாரங்களில் மூலவர் வெளிப்படுத்தும் அதிர்வலை சக்திகள் நிரம்பி இருக்கும். நாம் ஆலயத்தைப் பிரகார வலம் வரும் போது அந்த அதிர்வலை சக்திகள் நம்முள் புகுந்து நமக்கு ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் தரும்.

இது தேகத்தை மட்டுமல்ல நம் ஆத்மாவையும் உயர்த்தவல்லது. இந்தப் பலனை பைசா செலவின்றி பெற நாம் ஒவ்வொருவரும் அவசியம் ஆலயத்தில் பிரகாரங்களை வலம் வர வேண்டும்.

இதைக் கருத்தில் கொண்டே நம் முன்னோர்கள் முக்கிய ஆலயங்களில் மிகச் சிறப்பான பிரகாரங்களை அமைத்தனர். இறைவனின் அருள் அலைகளைப் பெறுவதற்கு மட்டுமன்றி மற்ற பயன்பாட்டுக்காகவும் கோவில் பிரகாரங்களை நம் முன்னோர்கள் திட்டமிட்டுக் கட்டினார்கள்.

கல்வி, நாட்டியம், நாடகம், மருத்துவம் மற்றும் பயன் உள்ள கலைகளை வளர்க்க பிரகாரப் பகுதிகள் பயன்படுத்தப்பட்டன. பொதுமக்கள் குறைகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் நீதிமன்றங்களாகக் கூட பிரகாரங்களை மன்னர்கள் பயன்படுத்தினார்கள். அதனால்தான் நமது மிகப்பழமையான ஆலயங்கள் எல்லாம் 3 பிரகாரம், 5 பிரகாரம், 7 பிரகாரம் என்று அமைந்துள்ளது.

இந்தப் பிரகாரங்களை நம் முன்னோர்கள் "ஆவரணங்கள்" என்று அழைத்தனர். ஒரு ஆலயம் எப்படி மனித உடல் அமைப்புடன் தொடர்புடையதோ அதே மாதிரி பிரகாரங்களும் மனித உடல் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன.

மூன்று பிரகாரம் என்றால் அது ஸ்தூல, சூட்சும, காரண உடம்பைக் குறிக்கும். 5 பிரகாரங்கள் என்றால் அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய ஆகிய கோசங்களைக் குறிக்கும்.

7 பிரகாரங்கள் என்றால் அலை அன்ன உடம்பு, பிராண உடம்பு, இச்சை உடம்பு, உருவமான உடம்பு, அருவமான உடம்பு, விஞ்ஞானமய உடம்பு, ஆனந்தமய உடம்பு ஆகியவற்றைக் குறிக்கும்.

சில ஏக்கர் பரப்பளவுக்கு பரந்து விரிந்திருக்கும் இந்த பிரகாரங்களைச் சுற்றி வலம் வருவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகத்தான் செய்யும். அதற்காக ஓட்டமும் நடையுமாக ஒருபோதும் பிரகாரங்களை வலம் வரக்கூடாது.

பிரகாரங்களில்தான் மற்ற கடவுள்களின் சந்நதி அமைந்திருக்கும். தீர்த்தம், தலமரம், வாகனம், ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் குறிப்பிட்ட வழிபாட்டுக்கான சந்நதிகள் என்று பிரகாரங்களின் ஒவ்வொரு பகுதியும் வழிபாட்டுக்குரியதாகவே இருக்கும்.

இந்தப் பிரகாரங்களை நாம் எப்போதும் வலப்புறமாகவே சுற்ற வேண்டும். இடது பக்கமாக சுற்றி விடாதீர்கள். அது அசுப பலன்களைக் கொடுத்து விடும். சந்நியாசம் பெற்றவர்கள் மட்டுமே மோட்சத்தை அடைய இடப்புறமாகச் சுற்றுவார்கள்.

பிரகாரம் சுற்றுவதை நம் முன்னோர்கள் "பிரதட்சணம்" என்று குறிப்பிட்டனர். பிரதட்சணம் என்றால் "வலமாகச் சுற்றி வருதல்" என்று பொருளாகும்.

ஒரு மையப்புள்ளியைச் சுற்றித்தான் ஒரு வட்டம் அமையும். அது போலதான் கருவறை மூலவரைச் சுற்றிப் பிரகாரங்கள் அமைகின்றன. கருவறை கோஷ்டத்தைத் தொடங்கி அந்த வட்டம் ஒன்று, இரண்டு, மூன்று என்று பிரகாரங்களாக விரியும்.

இறைவன் என்ற மையப்புள்ளி இல்லாமல் நாம் இருக்க முடியாது என்ற தத்துவத்தை ஆலய பிரகார அமைப்பு நமக்கு உணர்த்துகிறது. இறைவனின் அருளாசியும் அதிர்வலைகளும் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கிறது என்பதையும் இது காட்டுகிறது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## அன்டிஜன் பரிசோதனை 74 பேர் அடையாளம்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுபவர்களை அடையாளம் காண்பதற்காக வெளியேறும் இடங்களில் எழுமாறாக மேற்கொள்ளப்படும் அன்டிஜன் பரிசோதனைகளில் மேலும் 13 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, குறித்த பரிசோதனை மூலம் இதுவரை 74 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்த அன்டிஜன் சோதனைகள் ஜனவரி 5ஆம் திகதி வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

## வயதான மூதாட்டி உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் மிக வயதான 117 வயதுடைய "வேலு பாப்பானி அம்மா" என்பவர் நேற்று முன்தினமிரவு நாகொட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இரு பிள்ளைகளின் தாயாரான இவர் 1903, மே 03 ஆம் திகதி, களுத்துறை மாவட்டம், தொடங்கொடை பிரதேச செயலக பிரிவில் உள்ள நேஹின்ன கிராமத்தில் பிறந்தார்.

உலக முதியோர் தினத்தைக் குறிக்கும் வகையில் இந்த ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி, இலங்கையின் மிகவும் வயதான பெண் எனத் தெரிவிக்கும் சான்றிதழை, முதியோருக்கான தேசிய சபை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## குளங்கள் சீரமைப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 14 ஆயிரம் குளங்களை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்திற்கான நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் இலக்கு என்ற கொள்கைப் பிரகடனத்தின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 337 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 337 இலங்கையர்கள் நேற்று புதன்கிழமை காலை நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி, ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 305 பேர், மாலைதீவிலிருந்து 25 பேர் மற்றும் கட்டாரிலிருந்து 7 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-7)

## சிறைச்சாலைப் பாதுகாப்பிற்கு முன்னாள் இராணுவ அதிகாரிகள்

(கொழும்பு)

சிறைச்சாலைகளின் பாதுகாப்பிற்காக முன்னாள் இராணுவ அதிகாரிகளால் ஆன சிறப்பு குழுவென்றை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

200 பேர் கொண்ட குழுவொன்று இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார். (ஜ-4)



# சிறுவர் அரங்கம்

## இரகசியம்



முல்லாவின் புகழ் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே சென்றது. இதனால் அவருக்கு பல சீடர்கள் சேர்ந்தனர்.

ஓர் நாள் மன்னருக்கும் முல்லாவின் புகழ் தெரிய வந்தது. உடனே மன்னர் முல்லாவை வரவழைத்து உரிய பதவியைக் கொடுத்தார்.

ஒருநாள் முல்லாவின் நண்பர் ஒருவர் உங்களை எல்லோரும் அறிஞர், தத்துவஞானி என்று புகழ்கிறார்கள்.

மன்னரும் உம்மை மதித்து உங்களுக்கு உயரிய பதவி அளித்துள்ளார். இந்த அளவுக்கு தாங்கள் உயர்வு பெற்றதற்கான ரகசியத்தை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன் என்றார்.

ஆனால், அந்த ரகசியத்தை நான் உங்களுக்கு கூறினால் நீங்கள் ஊர் முழுவதும் தண்டோரா போட்டு விட்டால் என்ன செய்வது என்றார் முல்லா.

அதற்கு முல்லாவின் நண்பர், "நீங்கள் சொல்லும் ரகசியத்தை சத்தியமாக யாரிடமும் சொல்ல மாட்டேன்" என்றார். எனக்கு நம்பிக்கை இல்லை.

நீங்கள் யாரிடமாவது, நான் சொன்னதைக் கூறி விட்டால்? என திரும்பவும் கேட்டார் முல்லா.

நண்பர், எனக்கு கோடி பொன் கொட்டிக் கொடுத்தாலும் இந்த ரகசியத்தை வெளிப்படுத்த மாட்டேன் என்றார்.

நண்பரே! நானும் உங்களைப் போலத்தான். ஒரு ரகசியத்தைக் காப்பாற்றுவதில் நீங்கள் எவ்வளவு கவனமாக இருக்கிறீர்களோ, அதே போல் எனக்கும் கோடி கோடியாகப் பொருள் கொடுத்தாலும் என்னிடம் உள்ள ரகசியத்தை வேறு ஒருவருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கண்டிப்பாக கூறமாட்டேன் என்றார். வெறுத்துப் போனார் முல்லாவின் நண்பர்.

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்

71



காலாட்படை வீரர்களின் முதல் பிரிவினரின் கரங்களில் வாளும் கேடயமும். இன்னொரு பிரிவினரின் கரங்களில் ஈட்டிகள்.

வாளும் வைத்திருக்கும் காலாட்படை வீரர்கள் பெரும்பாலும் இடது கரத்தில் கேடயத்தைப் பிடித்திருந்தனர். வலது கரத்தை வாள் ஆக்கிரமித்திருந்தது.

ஈட்டி ஏந்திய வீரர்கள் ஒரு கரத்தில் மட்டுமே அதைப் பிடித்திருந்தனர். இன்னொரு கரம் அதைச் செலுத்துவதற்கு ஈட்டிகளை முதலில் செங்குத்தாகவே பிடித்திருந்தார்கள்.

சில வீரர்களுக்கு உயரமான ஈட்டிகள், சிலருக்கு குத்தீட்டிகள், ஆட்களைப் பொறுத்து, திறமையைப் பொறுத்து. குதிரை வீரர்களின் ஒரு கையில் குதிரையின் கடிவாளத்திலிருந்து வரும் சாட்டை. இன்னொரு கரத்தில் நீளமாக பளபளக்கும் வாள்.

படைகளைக் குதிரையில் இருந்தபடியே அங்கும் இங்கும் பார்த்தார் அலெக்சாண்டர். படைத் தளபதி பார்மீனியோவை நோக்கினார்.

அடுத்த நிமிடம் படைகளுக்குப் பூஜை ஆரம்பமானது. சில நிமிடங்கள் கடவுளுக்காக, நம்பிக்கைக்காக.

பிரார்த்தனை முடிந்ததும் தலையசைத்தார் அலெக்சாண்டர். குரல் கொடுத்தார் பார்மீனியோ. படைகள் பயங்கர சத்தத்துடன் புறப்பட்டன. முதலில் அலெக்சாண்டர். அவருக்குப் பின்னால் பார்மீனியோ. அவருக்குப் பின்னால் ஏனைய எல்லோரும். வழியனுப்பி வைத்தவர்களுக்கு சில நொடிகளுக்கு எதுவுமே தெரியவில்லை. அவ்வளவு புழுதி.

ஹெல்லஸ்பாண்ட் நதிக்கரையை நோக்கி விரைந்து கொண்டிருந்தன படைகள். Sea of Helle என்ற பெயரைக் கொண்ட நதியின் நீளம் சுமார் 65 கி.மீ. தென்கிழக்கு திசையில் ஆசியா.

வடகிழக்கு திசையில் ஐரோப்பா. இன்னும் புரியும்படி சொல்ல வேண்டும் என்றால் ஒரு கரையில் மாசிடோனியா. மறுகரையில் பாரசீகம். நடுவே எந்த விதக் குறுக்கீடும் இன்றிப் பாய்ந்து கொண்டிருந்தது ஹெல்லஸ்பாண்ட். (தொடரும்)

பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை. திருப்தி என்பது உயர்ந்த இன்பமில்லை. கருணையிலும் பெரிய அறமில்லை.

– குருநானக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊழித் தாண்டவம் ஆடிய 2020 உலகுக்கு சொல்லிச் செல்வது என்ன?

2020ஆம் ஆண்டு இன்றோடு விடைபெற்றுச் செல்கிறது.

2020ஆம் ஆண்டு முகிழ்த்தபோது, பிறக்கின்ற இப் புத்தாண்டில் நன்மைகள் ஏற்படட்டும். நாட்டில் சுபீட்சம் நிலவட்டும். சாந்தி சமாதானம் மலரட்டும் என்பதாகப் பலரும் ஆசி வழங்கினர்.

இதற்கு மேலாக, தமிழகத்தில் இயங்கும் தொலைக்காட்சி சேவையொன்று தமிழகத்திலுள்ள பிரபலமான சோதிடர்களை அழைத்து பிறக்கின்ற 2020ஆம் ஆண்டின் பலன்கள் பற்றிச் சம்பாசித்தபோது,

அத்தனை சோதிடர்களும் 2020ஆம் ஆண்டில் பஞ்சம்போம், பசிபோம், நோய் பிணி போம். ஒட்டுமொத்தத்தில் மிக உச்சமான ஆண்டு என்பதாகக் கருத்துரைத்தனர்.

ஆனால் நடந்தது என்ன? என்பதை நாம் கூறி நீங்கள் யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இராது.

பிறக்கின்ற ஆண்டு நல்லதாக – நன்மை தருவதாக அமையட்டும் என்று ஆசி வழங்கினால் அந்த ஆசி நிறைவேற வேண்டும். குருசேத்திரத்தில் போர் தொடங்குவதற்கு முன்னதாக தருமர் வீஷ்மரிடம் ஆசி பெறுகிறார்.

வெற்றி கிடைக்கட்டும் என வீஷ்மர் தருமருக்கு ஆசி வழங்குகிறார். வீஷ்மரின் ஆசி அப்படியே நிறைவேறுகிறது.

ஆக, ஆசி வழங்குகின்றவர்களின் ஆத்ம பலம் அவர்களின் ஆசியை நிறைவேற்ற வேண்டும்.

ஆனால் சமகாலத் தில் எல்லாமுமே தலைகீழாக மாறிவிட்டது. பௌத்த தேரர்கள் கொலைக்கு கொலை என்கின்றனர்.

சிறுபான்மை இன மக்களை நிந்திக்கின்றனர். கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றி, அத்தனை மனிதர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டிய பௌத்த துறவிகள் அதர்மத்தைப் போதிப்பவர்களாக மாறிவிட்ட பின்பு, எதுதான் நீதிவழி நடக்க முடியும்.

ஆக, இன்றோடு விடைபெறும் 2020ஆம் ஆண்டு முழுவதும் கொரோனா நோய் உலகை உலுப்பியது. இலட்சக்கணக்கான மக்கள் கொரோனாவுக்குப் பலியாகினர். உற்பத்திகள் வீழ்ச்சி கண்டன. தொழில் இழப்பு மனித வாழ்வை வெறுக்கச் செய்தது.

மரணத்தின் இறுதிச் சடங்கைக்கூட, செம்மையாக அனுஷ்டிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

மரணச் சடங்கில் வெறும் 25 பேர் மட்டுமே பங்கேற்க முடியும் என்று வரையறுக்கின்ற அளவில் நிலைமை மிக மோசமாயிற்று.

ஆனாலும் ஒரு முக்கிய விடயத்தை 2020 ஆம் ஆண்டு இந்த உலகுக்கு எடுத்துரைத்து விட்டுப் போகிறது.

ஆம், கொரோனாவுக்கு இன, மத, மொழி பேதம் எதுவும் கிடையாது. பணக்காரர், ஏழை என்ற பாகுபாடு இம்மியும் அறியாது. சாமானியர், பிரபலமானவர் என்ற ஏற்ற இறக்கத்துக்கு துளியளவும் இடம் இல்லை.

இதனையே 2020ஆம் ஆண்டு இந்த உலகுக்குக் கற்றுக் கொடுத்துள்ளது.

இதனை உணர்ந்து மக்கள் சமூகம் சமத்துவப்பட்டால்; அடுத்த ஆண்டுகளிலாவது மனித குலத்துக்கு விமோசனம் கிடைக்கும்.

## புதிய அரசியலமைப்பு தொடர்பான
# பொதுமக்களின் அபிப்பிராயங்கள் பெப்ரல் அமைப்பினால் கையளிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பில் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அபிப்பிராயங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகளை புதிய அரசியலமைப்பு தொடர்பில்பொது மக்கள் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விசேட குழுவிடம் பெப்ரல் அமைப்பு நேற்றைய தினம் கையளித்துள்ளது.

மேற்படி பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையில் இதுகுறித்த தெளிவுபடுத்தலைச் செய்திருக்கும் பெப்ரல் அமைப்பு மேலும் கூறியிருப்பதாவது,

கடந்த 42 வருட காலத்தில் 20 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டிருக்கும் தற்போதைய அரசியலமைப்பிற்குப் பதிலாக, விரிவான மக்கள் அபிப்பிராயத்தைப் பெற்று மேலும் முன்னேற்றகரமான அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிக்கும் போது அதுகுறித்து மக்கள் மத்தியில் விரிவான ஆராய்வும் விவாதமும் ஏற்பட வேண்டும். எனினும் தற்போது அத்தகைய விவாதமொன்று இடம்பெறாமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

எனினும் போதியளவு காலஅவகாசத்தில், பொது மக்களின் கருத்துக்களைப் பெற்று, அனைத்து சமூகப் பிரிவினராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் தயாரிக்கப்படும் அரசியலமைப்பு மேலும் ஜனநாயகத்தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

ஒரு அரசியலமைப்பு எந்தளவிற்கு மக்கள் அபிலாசைகளின் பிரதிபலிப்பாக அமைகின்றது என்பதைப் பொறுத்தே அதன் ஆயுட்காலம் தீர்மானிக்கப்படும்.

இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கூட, புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடமும் இருந்து பெற்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அதுகுறித்த பரிந்துரைகளைத் தயாரித்திருக்கின்றோம்.

குறிப்பாக தேர்தல் முறைமை தொடர்பிலும் மேலும் பல விடயங்கள் தொடர்பிலும் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று பெப்ரல் அமைப்பு தெரிவித்திருக்கிறது.

அந்தப் பரிந்துரைகளில் அரசின் தன்மை, அடிப்படை உரிமைகள், மொழி, அரசாங்கத்தின் கொள்கையை செயற்படுத்தும் அடிப்படை, நிறைவேற்றதிகாரம், பாராளுமன்றம், வாக்குரிமை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு உள்ளடங்கலான தேர்தல், நீதிமன்றம், அதிகாரங்களைக் குவித்தல் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் உள்ளிட்ட விடயப் பரப்புக்களின் கீழ் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# புகையிரத சேவைகள் வழமைக்கு திரும்புகின்றது

## புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

புகையிரத சேவைகள் வழமையான முறையில் இடம்பெறும். தூர பிரதேசங்களுக்கான புகையிரத சேவை குறித்து இவ்வாரம் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்க பிரதான செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் புகையிரத சேவையினை ஆரம்பிப்பது தொடர்பில் விசேட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் புகையிரத சேவை முடக்கப்பட்டுள்ளது. தூர பிரதேச புகையிரத சேவை குறித்து இவ் வாரம் இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என்றார்.

தூர பிரதேச பேருந்து சேவை வழமை போன்று சேவையில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்துமாறு பஸ் உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய பேருந்து சேவை ஈடுபடுத்தபடவுள்ளது என்றார். (ம-3)

# கடந்த 28 நாட்களில் 9785 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

கொரோனா பெருந்தொற்றை காரணம் காட்டி சிறைச்சாலை கைதிகளை விடுவிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் கடந்த 28 நாட்களில் 9 ஆயிரத்து 785 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் முதலாம் திகதி முதல் கடந்த 28 ஆம் திகதிவரையான 28 நாட்களில் 9 ஆயிரத்து 785 பேர் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் 10 ஆயிரம் கைதிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் தமிழ் அரசியல் கைதிகள் ஒருவர் கூட இந்த விடுதலை செயற்பாட்டிற்குள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# சத்திய தரிசனம்

## முடிவு அவன் கையில்



❖ அன்பை அதிகமாக வெளிப்படுத்துங்கள். குறைவாகப் பேசுங்கள். உண்மையான சேவையில் ஈடுபடுங்கள். இவை தான் தியானத்தின் அடையாளங்கள்.

❖ முதலில் கடவுள், அடுத்தது உலகம், கடைசியாக "நான்" என்ற அடிப்படையில் மனிதன் வாழ வேண்டும் . ஆனால், இன்றோ முதலில் நான், அடுத்து உலகம், கடைசியாக கடவுள் என்ற வரிசையில் மனிதன் சிந்திக்கத் தொடங்கி விட்டான்.

❖ வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதையும் தியானத்திற்காகப் பயன்படுத்துங்கள். அன்றாடம் வீட்டைச் சுத்தம் செய்யும் போது, இதயவீட்டையும் சுத்தப்படுத்தினால் அதுவே தியானமாகி விடும்.

❖ மனிதனுக்கு முயற்சி அவசியம். அதேநேரம், அந்த முயற்சியின் முடிவும் வெற்றி தோல்வியும் கடவுளாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்பதை மறந்து விடாதே.


❖ அழுக்குத் துணியை நீராலும், சோப்பாலும் வெண்மையாக்குவது போல அழுக்காக இருக்கும் மனதை பக்தி என்னும் நீராலும், நேர்மை என்னும் சோப்பாலும் பளிச்சிடச் செய்யுங்கள்.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை

## ஐந்தில் வந்தது சனி பகவான், அற்புதப் பலன்கள் இனி சேரும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**கன்னி இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் அர்த்தாஷ்டமச் சனியாகச் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று 5 ஆம் இடத்திற்குச் செல்கின்றார். 5 ஆம் இடம் என்பது பூர்வ புண்ணிய ஸ்தானம். உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் தனது சொந்த வீடான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் இனிய பலன்கள் ஏராளமாக வரப்போகின்றது. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வருமானம் உயரும்.

மகர இராசியில், ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு பகவான் இருக்கின்றார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே குடும்பத்தில் சந்தோஷ வாய்ப்புகளை அதிகம் சந்திக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

**சுபநிகழ்ச்சிகள் நடைபெறும்**

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தை அடையும் சனி பகவானால், நல்ல மாற்றங்கள் வரப்போகின்றது. இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறும். பிரிந்து சென்ற உறவினர்கள் பிரியமுடன் வந்திணைவர். செய்தொழில் எதுவாக இருந்தாலும் முன்னேற்றம் கூடும்.

**சனியின் பார்வை பலன்கள்**

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், 2, 7, 11 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கப் போகின்றார். வாக்கு, தனம், குடும்பம், களத்திரம், வெளிநாட்டு முயற்சி, இளைய சகோதரம், பொருளாதாரம், மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு, சேமிப்பு, கௌரவப் பதவி போன்றவற்றைப் பற்றி எடுத்துரைக்கும் இடங்களில் சனியின் பார்வை பதிவதால், அந்த ஆதிபத்யங்களில் எல்லாம் மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரும்.

2 ஆம் இடத்தை சனி பார்ப்பதால், பணப்புழக்கம் நன்றாக இருக்கும். சனியின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால் தம்பதியர்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கல்யாண முயற்சிகளில் இருந்த தடை அகலும். சனியின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால், தொழிலில் இதுவரை இருந்த இழப்புகளை ஈடுகட்டும் விதத்தில் வியாபாரம் சூடுபிடிக்கும்.

**சனியின் பாதசாரப் பலன்கள்**

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் அதிகரிக்கலாம். வீடு மாற்றங்களும் இடமாற்றங்களும் இயல்பாக வந்து சேரும்.

28.12.2021 முதல் 26.01.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார நிலை உயரும். தொழிலில் லாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைக்கும். சந்திரன் உங்கள் இராசிக்கு லாபாதிபதியாக இருப்பதால் இக்காலத்தில் பணப்பற்றாக்குறை ஏற்படாது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் மீது சுமத்திய குற்றங்களில் இருந்து விடுபட்டு மீண்டும் பணியில் சேருவர்.




27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. செவ்வாய் உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். எனவே முன்னேற்றத்தில் சிறுசிறு சறுக்கல்கள் வரலாம்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, 'சகட யோக' அடிப்படையில் பலன் கிடைக்கும். ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை உங்கள் கரங்களில் புரளும். ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது மிகச்சிறந்த பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டு. வருமானம் மிதமிஞ்சியதாக இருக்கும். மேஷ குருவின் சஞ்சார காலத்தில் நிதானத்தோடு செயற்படுவது நல்லது. விரயங்கள் அதிகரிக்கும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

21.03.2022 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின்போது, மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். மறைவிடங்களில் பாம்பு கிரகங்கள் சஞ்சரிக்கும் பொழுது நன்மைகளையே செய்யும். சுயபலமற்ற கிரகம் என்பதால் இருக்கும் இடத்தைப் பொறுத்தே பலன் கிடைக்கும்.

பண விரயம் அதிகரித்தாலும் அதற்காகப் பயப்பட வேண்டியதில்லை. தன ஸ்தானத்தில் கேது இருப்பதால் எந்த வகையிலாவது உங்களுக்கு வருமானம் வந்து சேரும். தேங்கிய காரியங்கள் நடைபெறும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. தொழிலில் மாற்றம் செய்தால் நல்லது என்று நினைப்பீர்கள். குடும்பச்சுமை கூடும்.

08.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இந்த காலகட்டத்தில் எதிர்பாராத மாற்றங்கள் இல்லம் தேடி வரும்.

ஜென்மத்தில் கேது இருப்பதால் ஆரோக்கியத்தில் மட்டும் அதிக தொல்லைகள் ஏற்படலாம். நினைத்த காரியத்தை செய்துமுடிக்க இயலாமல் உடல் நலத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படும். மருத்துவச் செலவுகள் கூடும். எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

**வெற்றி பெறவைக்கும் வழிபாடு**

வியாழன் தோறும் விரதம் இருந்து குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு, இல்லத்துப் பூஜை அறையில் குரு பகவான் படம் வைத்து, குரு கவசம் படித்து வழிபடுவது நல்லது. குடும்ப முன்னேற்றம் கூடும்.

**சனியின் வக்கிர காலம்**

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022 முதல் 09.10.2022 வரை, 27.06.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகின்றார்.

உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். எனவே நெஞ்சம் மகிழும் சம்பவங்களும் அஞ்சும்படியான சம்பவங்களும் நடைபெறும்.

உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டு. தொழிலில் ஏற்றங்கள் வந்து சேரும். பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது.



**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி தரும் பெயர்ச்சியாகவே அமையும். பொருளாதார நிலை உயரும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. செய்தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் கனிவும் பாசமும் கூடும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். தாய், தந்தை உறவு மேம்படும். சகோதரர்கள் உங்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்வர்.

பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பு கைகூடும். மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி பலன்தரும். பணிபுரியும் பெண்களுக்கு இனி வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடமாற்றம், இலாகா மாற்றம் கிடைக்கும். வேலை செய்யும் இடத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். (தொடரும்)

## முல்லையில்...

குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மாடு மேய்ப்பதற்காக அவ்வழியே சென்ற சிலர், கிணற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதைத் தொடர்ந்து கிணற்றை எட்டிப் பார்த்தனர்.

இதன்போதே, உருக்குலைந்த நிலையில், கிணற்றில் சடலம் இருப்பதை அடையாளம் கண்டனர்.

இதேவேளை, கள்ளப்பாடு தெற்கு பகுதியில் நேற்று 34 வயது குடும்பப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,281)

## மணிவண்ணனை...

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 10 உறுப்பினர்களும் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மணிவண்ணனை ஆதரித்ததன் மூலம் கட்சியின் கொள்கைக்கு துரோகம் இழைத்து, யாழ்ப்பாணம் மாநகர சபையில் எமது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் பத்துப் பேரும் டக்ளஸ்தேவானந்தாவுடன்கைகோர்த்து கட்டிப்பிடித்துக் கொண்டுள்ளனர்.

அவர்களை எமது இயக்கத்தில் இருந்து நீக்குவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## 55 மோட்டார்...

தனர்.

பளை வைத்தியசாலைக்கு அருகில் உள்ள தனியார் காணியில் இருந்தே, இந்த மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் காணியை துப்பரவு செய்த போது, நிலத்தில் புதைந்த நிலையில் வெடிபொருட்கள் இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் 11 மோட்டார் ஷெல்களை அடையாளப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில், நேற்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் அனுமதியுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அந்த இடத்தை அகழ்ந்தபோது, அங்கிருந்து 55 மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றை செயலிழப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,100)

## நல்லூர் பிரதேச...

உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் குமாரசாமி மதுசுதனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் பத்மநாதன் மயூரனும் முன்மொழியப்பட்டு பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது, குமாரசாமி மதுசுதன் 08 வாக்குகளையும் பத்மநாதன் மயூரன் 10 வாக்குகளையும் பெற்றதன் அடிப்படையில், புதிய தவிசாளராக பத்மநாதன் மயூரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-3,18,33)

## 4 மாத கர்ப்பிணி...

னைக்கான மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

பரிசோதனை முடிவுகள் கிடைத்ததும் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 மாதக் கர்ப்பிணிப் பெண்ணுக்கு திடீரென ஏற்பட்ட குருதிப்போக்குக் காரணமாக நேற்றுக் காலை மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அதனால் அவரது சடலம் பிசிஆர் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கில் நேற்றும்...

பட்டு.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 12 பேருக்கும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவருக்கும் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உடுவிலில் 8 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் ஏழு பேர் தனிமைப்படுத்தப்பட்டவர்கள். ஒருவர் தனிமைப்படுத்தப்படாதவர்.

சண்டிலிப்பாயில் 3 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் தொற்றாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தமையினால் சுய தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

தெல்லிப்பழையில் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். தொற்றாளருடன் தொடர்பு கொண்டிருந்தமையினால் சுய தனிமைப்படுத்தலில் இருந்தவர்.

புதுக்குடியிருப்பில் ஒருவர். ஏற்கனவே தொற்று கண்டுபிடிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர். தம்பகொலபட்டின தனிமைப்படுத்தல் நிலையத்தை சேர்ந்த ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மருதனார்மடம் உப கொத்தணியில் 136 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## இரகசிய உடன்...

ஜனநாயக கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

"நாம் கட்சி ரீதியாக சிந்திக்கவில்லை. மக்கள் நலன் சார்ந்து சிந்தித்தோம். மாநகர சபை நிர்வாகம் கலையும் அபாயமிருந்தது. அதனால் இரண்டு சபைகளிலும் செயற்பாட்டாளர்களை ஆதரிக்க முடிவெடுத்தோம்.

சிறப்பான வரவு-செலவு திட்டமொன்றை தயாரித்து மக்களிற்கு வழங்குவதே எமது நோக்கம் என்றார். (ம-3)

## புதிய முதல்வராக...

யாழ்.மாநகர சபையின் முதல்வரை தெரிவு செய்யும் விசேட அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

முதல்வர் வேட்பாளர்களாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் முன்னாள் முதல்வர் இ.ஆனல்ட்டும் சட்டத்தரணி வி.மணிவண்ணனும் முன்மொழியப்பட்டனர்.

சபை உறுப்பினர் அனைவரும் பகிரங்க வாக்கெடுப்பு கோரியதால், முதல்வர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றது.

வாக்கெடுப்பில் இ.ஆனல்ட்டுக்கு 20 வாக்குகளும் வி.மணிவண்ணனுக்கு 21 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இதனால் யாழ். மாநகர சபையின் புதிய முதல்வராக சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ம-3,18,33,101)

## இரட்...

நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 199ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் நாட்டில் நேற்றும் 639 பேர் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

நாட்டில்ஜனவரிமாதம்முதல்நேற்று வரை 42 ஆயிரத்து 702 பேர் கொரோனாத்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## மாவையின்...

சையான, ஜனநாயக விரோத சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டியின்றி வென்றிருக்க வேண்டிய யாழ்.மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்.

தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளமான யாழ்.மாநகர சபை தலைமையை எமது கட்சி இழந்தமைக்கு மேற்சொல்லப்பட்ட தங்களது நடவடிக்கையே காரணம்.

இதனால் ஏற்படும் கட்சியின் பின்னடைவுக்கு தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மட்டக்களப்பில்...

கடமையாற்றும் ஊழியர்கள் ஆயிரத்து 214 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் 63 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

கொரோனா தொற்று கண்டறியப்பட்ட தொற்றாளர்களை உடனடியாக வைத்திய சாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (ம-3)

மெகா பவர்
திகதி 30/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0719
N 3 7 33 55 70

மஹஜன சம்பத
திகதி 2020/12/30
சீட்டிழுப்பு இலக்கம் 4352
U 1 7 5 8 9 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 30.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2647
U 40 47 53 64

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/12/2020 சீட்டிழுப்பு இலக்கம் 1083
B 1 3 5 2 7 1

தன நிதானய
திகதி - 2020.12.30
சீட்டிழுப்பு இலக்கம் - 389
T 1 4 34 46

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1322 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 30/12/2020 தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
O 12 25 43 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,572,321

சீட்டிழுப்பு வாரம் 039 வெற்றி இலக்கங்கள்
சீட்டிழுப்பு திகதி 30/12/2020 புதன்
09 47 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,518,260/=

அத கோடிபதி
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 94,561,580
சீட்டிழுப்பு திகதி 30.12.2020
43 47 70 74 Z

சனிதா
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,169,425
சீட்டிழுப்பு இல: 3478
சீட்டிழுப்பு திகதி 30.12.2020
02 21 49 63 Q

ராசி
சுப்பர் ஜக்பொட் 24,83,139/=
திகதி : 30.12.2020
வெற்றி வாரம் : 3029
வர்ணம் : பச்சை
வெற்றி இலக்கங்கள் மிதுனம்
15 41 45 50
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 87,74,520

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1720 சீட்டிழுப்பு திகதி 30/12/2020
வெற்றி இலக்கங்கள்
11 33 35 54 C
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,405,528
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT



January 2021 க்கான புதிய பிரிவு ஆரம்பம்

- பகுதி நேர / முழு நேர கற்கை நெறி
- படிக்கும் போதே வேலை வாய்ப்பு
- வெளிநாட்டில் உயர்கல்வி தொடரும் வாய்ப்பு
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- படித்து முடித்ததும் 100% வேலை வாய்ப்பு

G.C.E O/L உடன்

TUTION FEE 30,000/- ONLY

CTHI

CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0760579999 | 0213146171 (C-1052)



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

0768226240 DHL (C-1049)



புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

தரம் 6 முதல் O/L வரை

புதிய கல்வியாண்டு - 2021

Zoom வகுப்புகள் மூலம்


ஆரம்பம் 04 ஜனவரி திங்கள்

பெற்றோர் நேரில் வருகைதந்து கட்டணத்தைச் செலுத்தி நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

புதிய அனுமதிகள் வழங்கப்படும். (5121)

077 459 8440


# மரண அறிவித்தல்



அமரர்

## முத்துமாணிக்கம் இராஜசிங்கம்

(இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர்)
( Retired Superintendent of Audit )

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முத்துமாணிக்கம் இராஜசிங்கம் நேற்று (30.12.2020) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து மாணிக்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சந்திரசேகரம் (முதலியார்) - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஞானம்மாவின் அன்புக் கணவரும் கௌரி (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீதரன், கலாரஞ்ஜனி (பிரான்ஸ்), லதாரஞ்ஜனி (ஆரம்பப் பிரிவு ஆசிரியை - புலரி கல்வி நிலையம், சண்டிலிப்பாய்), காலஞ்சென்ற ஸ்ரீ ஞானராஜ், டனராஜ் (சத்திரசிகிச்சை நிபுணர் - கந்தரோடை), ஹெமன்ரன் (கணித ஆசிரியர் - V/C.C.T.M.S , வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வேஸ்வரி (சண்டிலிப்பாய்), தயாபரசிங்கம் (ஜெர்மனி), பராபரசிங்கம் (கனடா), பரயோகசிங்கம் (லண்டன்), துரைசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோபிகிருஷ்ணா (கனடா), கிருஷ்ணமூர்த்தி (சண்டிலிப்பாய்), தயா (கந்தரோடை), கௌரி (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் துஷிதா, கிருஷாந்த், நிரோஷாந்த், நிலக்சினி, நிஷிஷன், நிஷாஷினி, யுலக்சினி, கோகுலக்சன், டனுலக்சன், டினோஜன், சுதர்ஜன், ஹரிஷன், கிரிஷா, ரோஷன், தன்யா ஆகியோரின் அன்புப் பேரனும் மயிலாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 94/1, கல்வளை வீதி, சண்டிலிப்பாயில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (31.12.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிவரையிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் சண்டிலிப்பாய் திரேசம்மாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதன் பின்னர் பெரியவிளானில் அமைந்துள்ள யுவானியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (5114)

சண்டிலிப்பாய். யாழ்ப்பாணம்.

கௌரி - மகள் (கனடா) : +14167121302
கலாரஞ்ஜனி - மகள் (பிரான்ஸ்) : +33645775778
லதாரஞ்ஜனி - மகள் (சண்டிலிப்பாய்) : +021 224 0571, 077 410 4779
டனராஜ் - மகன் (கந்தரோடை) : 077 737 0951

தகவல்:- குடும்பத்தினர்


10வருட வெற்றிகரமான சேவையில்....
கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
புதிய பிரிவுகள் • திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள் 02/12/2020 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம். (0000)
இதுவரையில் 178 மாணவர்கள் எமது ஆலோசனை வாயிலாக பயன்பெற்றுள்ளனர்
வீசா கிடைக்கமுன்னர் முற்பணம் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989



வேலை வாய்ப்பு
யாழ். நகரில் இயங்கும் புடைவை நிறுவனம் ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். (C-1059)
077 855 4840



றோயல் அக்கடமி
ROYAL ACADEMY
அரசடி றோட், யாழ்ப்பாணம். நாவலர் றோட், நல்லூர்.
புதிய கல்வியாண்டு - 2021
தரம் 6
- தமிழ் மொழி மூலம்
- ENGLISH MEDIUM

ஆரம்பம் 04.01.2021 திங்கட்கிழமை

- பெற்றோர் எமது இரு நிறுவனங்களிலும் 01.01.2021 (வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி முதல் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
- தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு அனைத்து பாடங்களும் நிகழ்நிலைக் கற்றல் ( Zoom Class ) மூலம் நடைபெறும். (C-1061)

குறிப்பு : ஏனைய வகுப்புகளிற்கும் 04.01.2021 இல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் புதிய அனுமதிகள் வழங்கப்படும். (நிபந்தனைக்குட்பட்டது.)
நிர்வாகி



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# 51ஆம் நாள் நினைவஞ்சலியும் சபீண்டிகரண அழைப்பும்

அமரர்

## லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)

2018 ஆம் ஆண்டு உயர் தொழில்நுட்ப மாணவன், யா/வயாவிளான் மத்தியகல்லூரி



கடந்த 11.11.2020 அன்று இறைவனடி சேர்ந்த லோகேஸ்வரன் பிரவீனன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (31.12.2020) வியாழக்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முல்லையும் மருதமும் பாலையும் நெய்தலும் கொண்ட ஒரு அழகிய கிராமம் புன்னாலைக்கட்டுவன். 11.11.2020 அன்று. அது ஒரு புதன்கிழமை. அன்றும் வழமைபோல் குயில்கள் கூவ, பட்சிகள் கூட்டம் ஓசை எழுப்ப காலையும் விடிந்தது. ஆனால் அன்று மாலை 3 மணியளவில் உன் உயிர் இறைவனடி சேர்ந்தது.

இன்று 51 நாட்கள் கடந்துவிட்டது. ஆனாலும் இன்றும் உன் நினைவுகள் எம்மை உலுப்பிக்கொண்டே இருக்கின்றது. என்றும் உன்னைப் பெற்றவர்கள் கண்கலங்கி தடுமாறி அந்த காலத்தைப் போக்க முடியாமல் வலியோடு வாழ்ந்து வருகின்றோம். நாங்கள் இந்தப் பூமியில் இழந்த மிகப்பெரிய சொத்து நீதான். தம்பி கபிலன் உன்னோடு சேர்ந்து உணவு உண்ட தங்கைமார், தம்பி நீ மீண்டும் வருவாய் என காத்திருக்கிறார்கள். எங்கே கபிலன் ஒருகணம் உங்கள் விழிகளைத் திறந்து உங்கள் திருமுகம் காட்டி சிரித்துப்பேச மீண்டும் எம்முடன் இணைந்திரு. எங்கள் செடியில் பூத்த முதல் பூவே கபிலன். நீ நட்ட மாமரமும் பூக்கவில்லை. தம்பி வரட்டும் என்று சொல்லிக் காத்திருக்கிறது. தம்பி உன் நினைவோடு என்றுமே வாழ்ந்துகொண்டிருப்போம். (5116)

பிறப்பு 18.05.1999

இறப்பு 11.11.2020

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்கள்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.